உ

முருகக்கடவுடுணை

திருமதி A. சிப

மயிலாசலக்கலம்பகமும்

திருப்புகழ்

பதிகங்கள்.

இவை

மஹான் வண்ணச் சரபம்

முருகதாசசுவாமிகள் திருப்புகழ்ச்சுவாமிகள்

எனவழங்கும்

ஸ்ரீலஸ்ரீ தண்டபாணிசுவாமிகள்

அருளிச்செய்தன.

பொம்மைய பாளையம் பெரியமடம்

வீரசைவசிங்காசனாதிபதியாகிய

ஸ்ரீமத் - சிவக்கியானபாலையசுவாமிகள்

பொருளுதவிகொண்டு

திருவாமாத்தூர்

கௌமார சபையாரால்

பதிப்பிக்கப்பட்டன.

இரண்டாம் பதிப்பு.

ரத்தாக்ஷி௵ மகரரவி.

சென்னை:

கேசரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

உ

முருகக்கடவுடுணை

சாத்துகவிகள்

சோழவந்தானூரிலெழுந்தருளியிருந்த

ஸ்ரீமத் - கந்தசாமி சுவாமிகள்

அருளிச்செய்தன.

அறுசீர்விருத்தம்

மேலைவிண்ணூரவர்வேள்விப் புலையுமிகழ்திருப்புகழோன் விளம்பிச்சூட்டப், பாலையனுக்கருள்புரிந்த மயிலமலைக்குகன்கொள்கலம்பக நூற்பான்மை, யோலையெழுத்துயர்வுணராப் புதுப்புலவர்குழுவறியாதுண்மைவெண்மை, வாலையருண்முற்பவத்தும் பெற்றபுலவோருணர்ந்து மகிழ்தற்பாற்றே.

வெண்பா

கள்ளக் கருத்தினர்க்குக் கைப்பாய்க் களங்கமின்றித்
தெள்ளத் தெளிந்தவர்க்கே தித்திக்கு—முள்ளப்
பலிக்குந் திருப்புகழைப் பாடுஞ் சரபங்
...விக்குமயி லக்கலம்ப கம்.

இந்நூலாசிரியரது மாணுக்கர்களிலொருவராகிய

தி - செ. சித்திரபுத்திரபிள்ளையவர்கள்

இயற்றியன

அறுசீர்விருத்தங்கள்.

திருவருண் முருகதாசன் றிருப்புகழ்க் காரனெங்கள்
குருபரன் றண்டபாணிக் கோலமுஞ் சமைந்தமேலோ
னருள்வலிப் பெரியோர்போற்று மயிலொடு மயிலமேவிக்
கருணைசெய் கந்தன்மீது கலம்பக முரைசெய்தப்பால். (க)

அதிநய வண்ணப்பாவே யாந்திருப் புகழுமற்றும்
பதிகமோ ரிரண்டும்பாடிப் பாலைய முனிக்குமன்னுன்
றுதிபகர்ந் தருட்பேராண்மை தோய்சிவப் பிரகாசற்கும்
விதிமுறைப் பதிகம்பாடி மேதினி யுயச்செய்தானே. (உ)

எண்சீர் வண்ணவிருத்தம்.

தனந்தனந்தன தானன தனனு.

கலம்பகம்பல பாடிடுபுலவீர்
கவின்பெறும்பொழி லார்திருமயிலா
சலம்புரந்தவிர் சேயசண்முகவேள்
சரண்புனைந்துயு மாறுகொள்விழைவா
னலம்பொலிந்தநெல் வேலியில்வருவா
னவின்றதொன்றுள தேயதனிடைநீர்
பொலம்பிறங்கயி னீபமொடணிதோள்
புனைந்தவண்கவி நாடுதல்கடனே.

இந்நூலாசிரியரது பத்தர்களிலொருவராகிய

உரத்தூர் சின்னுரெட்டியாரவர்கள்

இயற்றியன

வேண்பா.

மாமதுரச் செந்தமிழ்ப்பா வாணர்தமக் கன்னையாய்ப்
பாமருஞ் சீர்பெறச்செய் பாலைய - னுமகனோர்
தண்டபா ணிச்சரபந் தன்னைமயி லாசலத்திற்
கண்டளவி லுள்ளங் களித்து. (க)

கட்டளைக்கலித்துறை

குருநதிக்கேற்ற முகமனுங்கூறிக் குழைந்தணைத்துத்
திருநீறுநெற்றியிற் றீட்டிநங்கந்தன் றிருவடியிற்
கருமாலைநீக்குங் கவிமாலைசூட்டெனக் காணரிய
பெருமானுரைத்தன னென்றேசந்தோடம் பிறந்தபின்னே. (உ)

இரட்டையாசிரிய விருத்தம்

அந்தமயிலாசலக் குகன்மகிழ்கலம்பகமு மணிதிருப்புகழிராறு, மநு தினஞ்சிறுவர்களு மாவலொடுமேத்துதற்காகுமிருபதிகங்களும், தொந்த முறுமெய்ப்புகழ்ச் சிவஞானபாலைய சுவாமிபுனை பதிகமொன்றுந், தூயபுலமைச்சிவப் பிரகாசமுனியிசைதொனிக்கின்றபதிகமொன்றுங், கந்தவேளருளையுந் தனதன்பருக்குதவு கருணை பொலிகின்றபண்புங், கவி கோடியாயினும் பொழிவதற்கஞ்சாத காளமுகினிகர்மாட்சியுஞ், சந்தமலி யொலியலந் தாதியுடனெழுவகைத் தமிழிலக்கணமொழிந்த, தாட்டிக மும்பின்னுமுள்ளபலதகவுந் தழைத்திடமொழிந்தனனரோ. (ந.)

உ

குருவே துணை

பதிப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியசுவாமிகளது மாணாக்கரும் குமாரருமான

தி - மு - செந்திநாயகம்பிள்ளை

இயற்றியது.

எண்சீர்விருத்தங்கள்.

திருமலியு மயிலமலைத் தலைமிசைவாழ் முருகோன்
றிகழ்புயத்திற் கலம்பகப்பா மாலைமுன்பாலையன்
பொருவிலுரைப் படிமுருக தாசகுரு நாதன்
புகன்றணிந்தா னதனையிந்தப் புவியினர்தேர்ந் துய்வான்
கருணைகொளப் பாலையன் சுதனும்பா லையன்
கவின்மிகுமச் சினிற்பதித்துக் கனவுதவி புரிந்தா
னிருநிலமுற் றவர்பெறவப் புத்தகந்தீர்ந் ததனு
லிரண்டாகும் பதிப்பினைநன் கினியதயை யாலே.

அந்தப்பா லையன்சுதனுப் பொன்னுசா மிப்பே
ரபைந்துதவ நிலைகொளும்பா லையனெனும் பெரியன்
சொந்தப்பான் மையிற்பொருளீந் தச்சியற்றிச் சோலை
துன்னுசிர வணபுரரா மானந்த முனிவன்
வந்தற்பாற் றன்னிடஞ்சந் தித்தபெருங் களிப்பை
வளர்க்கவெளிப் படுத்தினன்பொன் மயிலுகைக்குங் கந்தன்
சந்தப்பாப் பதிகமுதற் சிலதுதிக ளதனிற்
சார்ந்தமைந்த வப்பெருமை சாற்றரிதா மன்றே.

குருபாதமேகதி.

உ

முருகக்கடவுடுணை.

மயிலாசலக்கலம்பகம்.

பாயிரம்.

கோச்சகம்.

அன்றுசிவப் பிரகாச னரியதுதி தனக்கெய்தச்
சென்றுபகர்ந் தமைநாடிச் சிவஞான பாலையன்
குன்றுளுயர் மயிலமலைக் குமரனுக்குக் கலம்பகமொன்
றின்றுசொலத் திருப்புகழோ னிடத்திலினி திசைத்தானே

வெண்பா

ஆட்டுப்பால் வாய்வை யடக்கி யடுத்துவந்து
சீட்டுக்கு ளாடலொன்று செய்துபல—பாட்டுடைய
பாலையனை யேவியென்னைப் பற்றிவலி தாண்டுகொண்டான்
சோலை மிகுமயிலத் தோன்.

எண்சீர்வண்ணவிருத்தம்.

தனதனதத்தன தத்தத்தனந்தனனா

சயிலமுழுக்கவும் வெட்கச்சிறந்தரனார்
தமதுருவொத்தரு விப்பொற்பிசைந்துளதா

மயிலமலைக்குக னுக்குக்கலம்பகநூல்
வணைகுவதற்குயர் சொற்கட்டுவெந்தருள்வீர்
வெயிலவனுற்றவ யிற்றுச்செழுமகளிறே
வெளிறுமலர்க்குளி ருக்கைக்கிசைந்தவளே
யயின்மயில்குக்குட முற்செப்பநின்றனவே
யடியர்பதக்கம லத்துற்றநுண்பொடியே.

நூல்.

மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

திருமகள்சேர் நெடுமாயன் செங்கமலக் கண்கடரு
மிருமடவார்க் கிடைநீடு மெழிற்பவள மலைபோல்வாய்ப்
பரிதிமதி யிசைந்தாங்கு பகர்முடியு முகமொன்றும்
விரிகருணை விழிமூன்றும் விளங்குகுழைச் செவியிரண்டும்
வண்பனுவற் பைங்கிள்ளை மணநுகரு மணிநாசிச்
சண்பகமுஞ் சிறுமுறுவற் றரளநகைக் கனிவாயும்
பொற்பணியும் பன்மலரும் பொலிந்தகழுத் தொடுமார்பும்
விற்படுமின் னெனக்காணும் வென்றிவேல் வியன்சீரு
மடல்வயிரந் திரிசூல மபயம்வர தந்துலங்குங்
கடகநெடுங் கரந்தாங்குங் கவின்றோள்க ளொருநான்குங்
குஞ்சிமணிச் செஞ்சதங்கைக் கொத்தமையுங் கோசிகமும்
விஞ்சியபே ரானந்தம் விளைத்தருளுந் துணைத்தாளுங்

கொண்டுமயி லாசலத்தின் குவட்டிலுறுங் கோயிலிடை
மண்டுசடைச் சிவஞானி வலத்தமர வாழ்கின்றாய்
மயிலேறித் தகரேறி மழவெள்ளைக் களிறேறிக்
குயில்போலு முமையாள்கண் குளிரவருங் குருந்தேநீ

இவையெட்டுந் தாவுகள்.

அரன்வழிபடமுன மருணலமருளினை
முரகரியமரர்முன் மொழிபுகழ்மருவினை
மயனமுதலமர வறமொடுகருவினை
புயலிவர்மகபதி புனைமுடியுதவினை

இவைநான்கும் அராகங்கள்.

அன்பொடுமுன் றுதிகூறி யாறெழுத்தா லருச்சித்துத்
தென்பொதியைமிசைவாழ்வான்சிறப்பனைத்தும்பெறச்செய்தாய்
நின்னுமத் தொன்றினையே நிதங்கூறச் சலியாத
மின்னுளன் றிழந்தகரம் விரைந்துதவி மீண்டுவந்தாய்
நற்கீரன் சிறைநீக்கி நவிலரிய தமிழணிவான்
கற்கீறி யலகையையுங் கடியவடி வேல்விடுத்தாய்
முற்றுசுவைக் கவிப்பொய்யா மொழிப்புலவன் களிகூரப்
பற்றுபெ[illegible] கோலொடுமுன் பாலையின்முட் டையுமானாய்
தென்ன[illegible]க் கோபுரத்திற் றிகழொருவன் றனக்காக
முன்னமொரு தூணிடத்தின் முளைப்பதற்கு மிசைவுற்றாய்
போரிநகர் முனிவன்முதற் புகலுமவர் புகல்கின்ற
சீரியவ ரளவில்லார் சிந்தித்த பேறளித்தாய்

இவையாறுந்தாவுகள்.

ஏனமருப்பற மோதிவதைத்தனை
யேழிசையிற்கவி கோடிதொடுத்தனை
மானவிர்கட்குரி யாரைமயக்கினை
மாசறுசிட்டிவி ஞேதமியக்கினை

இவைநான்குநாற்சீரோரடியம்போதரங்கங்கள்.

மாவடி யோடற வென்றனை
மால்வரை யாவினு நின்றனை
தாமத ரோர்வரி தாயினை
சாரணர் வாழ்வற மேயினை

இவைநான்குமுச்சீரோரடியம்போதரங்கங்கள்.

சேவல்பொ றுத்தனை
பாவம றுத்தனை
சிந்தையு ளுற்றனை
விந்தைகள் பெற்றனை

இவைநான்குமிருசீரோரடியம்போதரங்கங்கள்.

ஆதலில் - இது தனிச்சொல்.

கடலிற்பொருநையிற் கனமிற்றமியேன்
றிடமுடன்விடுத்த செழுந்தமிழ்ப்பனுவ
லனைத்துமீண்டொளிர்தர வளித்துமுன்னின்று
தினைத்துணைத்துயருஞ் சேராதோரீஇத்
திருமலைக்குவட்டிற் செய்தபேராட

ஹுருமலைக்கோயிலி லுரைத்தமாற்ற
மாதியபிறவு மகிலத்தோரும்
பேதியாவண்ணம் பேசப்பரிந்து
கைச்சிலைக்குறவர் கவின்றருசாரற்
பச்சிளஞ்சோலைப் பரண்மீதிருந்தாண்
மதலையென்றியாவரும் வழுத்தவைத்துப்
பதநிழற்றருவாய் பரமெனவந்தேன்
விதிமுறைதவறி வெள்ளிலைமென்று
கதிர்மணிவடமுலை கருத்துட்டோன்றப்
பழையபாவொன்று பகர்வான்றனையும்
விழைதருகருணை மிகையாற்புரந்தாய்
நின்றிருவுள்ளமெந் நோதத்
தென்றிகைப்பொழிக்கு மெனவிரங்கினனே. (க)

இஃதாசிரியச்சுரிதகம்.

வேண்பா.

இரங்குந் திருவுள்ளத் தேற்றமுற்ற செவ்வேள்
வரங்களெல்லா நல்குமலைகேள்—குரங்கனைய
பாழ்மனமே பல்கோடி பத்தர் பரிசுபெற்று
வாழ்மயிலத் துள்ள மலை. (உ)

கட்டளைக்கலித்துறை.

மலைத்தெய்வமேபரமென்றுைப்பிடாச்சிலமானிடருஞ்
சிலைத்தெய்வம்வைத்துப் பலவாறுநாமங்கள் செப்பமிலன்றே

நிலைத்தெய்வம்வாழு மயிலாசலத்தி னிறைபுகழ்நேர்
கலைத்தெய்வமானபிடியேவெண்டாமரைக் கன்னிகையே. (௩)

கலிப்பா.

கன்னிக் குறத்தி கணவன் மயிலவெற்பை
யுன்னிக் கருத்தோ டுடலுருகப் போற்றிசைக்கு
மென்னிட்ட மின்னதென யாரறிவா ரென்றனக்கு
மின்னிற் றிகழ்ந்தகதிர் வேலுமயி லுந்துணையே. (௪)

கலிநிலைத்துறை.

மயிலாசலத்துற்ற குமரேச னுக்கான வழிபாடதாற்
கயிலாயமொடுமேரு வரைமீதுவைகுங் கனற்கண்ணுதல்
பயிலாகமத்தைப்ப ழிக்கின்றதீயோர்கள் பகைமிஞ்சுநா
ளெயிலாருமடவார்த மக்கிச்சைகொடுவாட லொவ்வாதநே

கட்டளைக்கலிப்பா.

வாதநூற்பிணக் காளர்கண்காணரு
மலயமால்வரை மாமுனிதன்னருட்
போதவாரியின் மூழ்கிட நாடுவேன்
புந்திநொந்துபு லம்பிடலாகுமோ
வேதநான்முகக் கள்வனைக்குட்டிய
வீறுகொண்டொளிர் மெய்ஞ்ஞானதேசிகா
மாதமோர்திரு நாள்வருஞ்சீர்திகழ்
மயிலமால்வரை வாழ்முருகையனே. (௫)

கலிவிருத்தம்.

ஐயமின்றிமுன் னறைந்தவாசகப்படி யருளி
மெய்யர்தம்புடை யூடுறவிடுக்குநா ளுளதோ
வையம்வானொடு துதிசெயுமயிலமா மலையின்
செய்யபொற்குவ டாமெனத்திகழ்தருஞ் சேயே. (எ)

அறுசீர்விருத்தம்.

சேயநாண் மலர்கொண்டுன்னைத் தினந்தின மருச் சித்தேத்துந்
தூயவர் கமலப்பூந்தாட் டுகளனி தலும்வீண்போமோ
மாயவன் மருகா விண்ணோர் மகள்புணர் கனவாவள்ளி
நாயகா மயிலவெற்பி னடஞ்செயு முருகவேளே. (அ)

எழுசீர்விருத்தம்.

முருகருமலர்க் கடம்பணிபுயத்தனை மூவிருமுகத்தானை
யருகர்பாழ்மதத் திமிரமிவ்வுலகைவிட் டகலவந்தருள்வானைப்
பெருகுசீர்த்திரு மயிலமா மலைமிசை பேணியபெரியோர்தங்
கருணைஞானமுஞ் சித்தியுமுணர்பவர் காலனுக்கஞ்சாரே. (கூ)

எண்சீர்விருத்தம்.

அஞ்சலளித் தாண்டபெருங் கருணைச்சீரு
மருணகிரி தானெனநீ யறைந்தசொல்லும்
வஞ்சகமென் றிகழ்வதற்கு மஞ்சுகின்றேன்
வருதகமினிச் சகிப்பதற்கும் வல்லேனல்லே

னெஞ்சகத்தன் றுடியதை மறக்கமாட்டே
 னெடுமயிலக் குவட்டினின்முன் னின்றேன் கண்பார்
பஞ்சவன்னச் சிகியூரும் பவளமேனிப்
 பண்ணவனே யெண்ணரிய பான்மையானே. (க0)

இரட்டையாசிரியவிருத்தம்

ஆனமட்டிற்பணிபு ரிந்துனதுமெய்யன்ப ரவையினிற்பு கவிரும்பா, தணிநகைமடந்தையர்மு லைத்துணைநினைத்துருகி யலமருந்தமியனேனே, யினருக்கெமனனைய வீரர்முதலோர் களுமி றைஞ்சும்பதத்தில்வைத்துன், னெழில்வதனநிரை குலவு மறுவகைநெறித்தலைவ னென்றுளிரவுஞ்செய் வையோ, கானவக்குடியிலொரு கருகூலமெனவந்த கன்னிக் கினசந்தகணவா, கனகநகராதிபன்வ ளர்த்தபிடிகண்டுளங் களி கூரவருகந்தனே, வானளக்குங்குவடு தொறுமிழியுமருவிபல மாலிகையெனக்குலாவு, மயிலாசலத்தில்வரு புலவோர்துதிக்கு மொரு வடிவேல்பிடித்தகுருவே. (கக)

புயவகுப்பு.

தனன தான தத்த தன - தானத்தனந்தன.

குருபராவெனத்தினமு முருகிநாடுமெய்ப்புலவர்
 கொணர்வதானமுத்தமிழை நேசித்துயர்ந்தன
குரவநீபமுற்பகரு மளவிலாமலர்த்தொகுதி
 குலவுமாலிகைத்திரள்கள் சூடிப்பொலிந்தன

குறைவுறுவொளிப்பரிதி யனையதோளணிப்பகுதி
கொடுபல்பூணெடுத்தொருமு நூலுற்றிலங்கின
குவிசமுவிலைப்படைவில் கணைவைவேன்முதற்பலர்சொல்
குருதியூனுடைக்கருவி சேரச்சுமந்தன
குகுகுகுவெனத்தனது சிறகைமோதடற்பறவை
குளறிடாமொழிக்கிளியொ டேறிப்பிறங்கின
குளிரும்வாவியிற்கவுரி முலையிலேடுகிர்த்திகையர்
குயமுமார்வமுற்றமுத மீயப்பிசைந்தன
கொடியராவினைப்பகலை யுலகின்மாறிவைத்தமரர்
குழுவெலாமெதிர்த்தமர்செய் தோடக்கவின்றன
குறளைநாரதத்தவசி முயலும்வேள்வியிற்றகரோர்
குதிரையாகிடக்கசையி னுல்விட்டுவந்தன
குடையதாமெனக்கலப நிழல்கொண்மாமயிற்கடவல்
குணமெனுநினைப்பவர்க ளூடுற்றவிர்ந்தன
குமிழிதோய்மதத்தயில மொழுகும்வாரணக்களிறு
குதறினுலெழிற்றலையின் மோதிச்சிவந்தன
குவளைநேர்விழிச்சசிமின் மருவுவான்வளர்த்துதவு
குமரிபூண்முலைக்களப மாரக்கமழ்ந்தன
கொடியினூடுவைத்திறுக முடியும்வார்தழைக்கலைகொள்
குறமினுளணிப்பரண்மு னேகிக்குவிந்தன
கொலைசெய்வாள்விழிச்சிறிய மகளிர்பார்வைமெய்த்தவர்கள்
குலைவுறுமனக்கவன மீறப்பொருந்தின

கொடுமையேமிகப்புரியு மவர்கள்வேரறக்கறுவு
குறியுளார்தமக்கிழிவு றாமற்புரந்தன
கொடையிலாமுழுக்கயவர் மனைகடோறுமுற்றடியர்
குறுகிடாதருட்கடலின் மூழ்கச்செய்பண்பின
குசையுநாணுறக்கதுமை யுடையமிபாமெனப்பெரிது
குதிகொள்வேனுளத்தினும நாள்சற்றொளிர்ந்தன (வ)
வருவவாதமிட்டுழலு மவர்கள்போகமற்றவர்க
ளணுகுமாறிரட்டியந னீதிக்குளொன்றின
வணிகொள்வார்செவிக்குழைக ளுலவுசீர்பொறுத்தழிவி
லசலயேயெனக்கவிஞர் பேசக்கிடந்தன
வடலையாருடற்பரமர் பிரணவாகரப்பொருளை
யறியுநாள்புனற்சடில மேறிக்குளிர்ந்தன
வகிலலோகமுற்பருகி யுமிழுமால்வயப்படையை
யடையுமாறியற்றியநல் வீறுற்றெழுந்தன
வரியநான்மறைக்கிழவ னுடலில்வேர்வைவிட்டலறி
யவசமாகிடச்சிறிது கோபிக்கைகொண்டன
வமரர்கோன்மிகப்பயமொ டிணையில்காவிரிக்கரையி
லமையெனுவுருப்பெறுத தீரப்புரிந்தன
வடல்கொள்வீரருட்டலைவ னொருவனீசுரக்கணைகொ
டவுணர்கோனினைப்பழிதல் காணச்சிறந்தன
வலருநம்வாரிசக்கடவுள் வரமதாலுவப்படையு
மவர்கண்மேலெதிர்த்தவனை யாளப்புகுந்தன

வளவின்மாயைவெற்புருவ முடையதானவப்பயலை
யணுவைநேர்பொடிப்படமு னுளட்டுநின்றன
வழலும்வாய்விடக்கடிது பொருதாருகக்கொடிய
னழியவேல்விடுத்துலக மோதத்திகழ்ந்தன
வறிவினுன்மிகப்பெருமை யுடையகோளரித்தகுவ
னறையும்வாசகப்படிய னேனைத்தடிந்தன
வலைமகோததிக்கிடையி னெடியமாமரத்துருவொ
டிருவானையப்பொழுதி லேவெட்டுமொய்ம்பின
வமலயோகதத்துவசின் மயசிவோகமுற்றவர்த
மாசனுமகத்தியனை நேர்முத்தரன்பின
வயர்வுறுமலைக்கணமு முருகனேயெனப்பகரு
மவள்கைவேறுபட்டதனை யீதற்கிரங்கின
வலகையான்மிகத்தளரு மொருவனோடுபற்பலரு
மவிவுறுதுகற்கதவு கீறப்பிளந்தன
வதிகவாழ்வுடைப்பழைய மதுரையூரினிற்புலவ
ரலமராதுணைக்குறியி னுல்வைத்தநண்பின (௭)
கருதுமாறுமுற்குலவி யுதவிடாதபொற்குவடு
கதறமோதிடத்தகுதி யாவுற்றசெண்டின
கடலையேவிடத்துணியும் வருணனார்தொழத்தனது
கதிர்குலாவுசத்தியினை வீசிக்கனன்றன
கனகநாடுடைத்தலைவன் வலியதூதரைக்கொடுசெய்
கபடமானதிற்சிறிது நோவறறிருந்தன

கவிசொலேனெனத்தினமு நுவல்பொயாமொழிக்கெதிரோர்
    கரியகோல்பிடித்திசையு மாடற்பயின்றன
கனலதாமலைக்கருகி யிலவுகோபுரத்துயுமொர்
    கவிஞருதியிற்பகர்பல் பாடற்றுறைந்தன
களிறுநாணுறத்தொனிசெய் பனுவலானொருத்தனது
    கலியின்வேரறத்திருடி யிபத்துணிந்தன
கலைவலார்மிகப்புகழு மிசைகொள்போரியிற்றவசி
    கவலைதீர்வதற்கொருக ளாசத்தியைந்தன
கறையில்பாலையற்குவனக பெருகவோர்கவிக்குரிய
    கனவினார்மலர்க்கொடுசெல் வாரத்தமிழ்ந்தன
கலுழனார்கையிற்றலையை நிருமலாநதிக்குரிய
    கரையில்வீசுமுற்கடிதி லேகிக்கவர்ந்தன
கழறுமேழ்வனைப்புவியி னுயிரெலாமழத்தனது
    களியினான்மிகக்குதிகொ ளேனத்தைவென்றன
கயிலையீசனைப்பொருவு முனிவன்வாய்மொழிப்படியோர்
    கடவுண்மாமணிச்சுடிகை வீழத்துரந்தன
கனியெண்மோதகக்குவிய லனையவேமிகப்பருகு
    கரியினீள்வயிற்றிரவி மேவக்கடிந்தன
ககனமாநதிப்புனலை யனையநீரழைத்துமைகொள்
    கனவிடாயறச்செயும்வி னோதத்தொழும்பின
கமலவாவிவிட்டெழுமோர் முதியதாழையுட்கருது
    களவுதீர்தரக்கரம தான்பெய்ப்புகன்றன

கவளயானையொத்தொளிரும் வழுதிகூன்விடச்சுரமோர்
கணநிலாதறத்திருவெண் ணீறிட்டுகந்தன
கடுவைநேருடறசமண முனிவரர்முழுககொடியர்
கழுவிலேலறிடத்தமிழை வாரிச்சொரிந்தன (ரு)
மருவருமலர்க்கணைக ளளவில்கோடிதைத்துருகி
மகளிர்சேனையிற்குரிமை மீறிப்புணர்ந்தன
மதுரசாகரத்தமிழை யுதவுசீருடைப்பொதியை
வரையின்வாணர்மெய்த்தவசு போலப்படர்ந்தன
வகுளநாண்மலர்த்தொடையல் புனையும்வேண்முதற்சிலருண்
மகிழ்வெலாமறப்பெருகு கோலத்தமைந்தன
வரதமானதைப்பொருவி லபயமானதைக்கொடுதன்
வலிமைநாடுமுத்தமர்வி சாரத்தைவிண்டன
மறவனோடுகைச்சமர்செய் திரவிலோர்கொடிக்குவகை
மலியுமாறெழிற்கயல்கண் மீறக்கொணர்ந்தன
மறதியாலுணக்களியின் மூடுகுவான்வெளிப்படவு
மனையின்மேயதிற்சிறிதி லாமறப்பகிர்ந்தன
வயதினாலுமிக்குயரு மவண்முனுவலிற்கடியின்
மணலிலோர்பழத்தினைய நாள்விட்டெறிந்தன
மறுவிலாவரைக்கவிதை யொருவனோதவிற்புளிய
மரமதூடுகொப்பொடிவ தாகத்தெரிந்தன
மனையலாதுமற்றவரை யனையெனுநினைப்பவன்முன்
மணியினுவறப்பகர்த லாதிக்கமர்ந்தன

வனசலோசனத்தொருபெண் முடியின்மேல்விழத்தருகல்
வழுகுமோர்படிக்கடியி லேநிற்கைகண்டன
வயிணவாதரத்தொருவ னிசையுநாளின்முற்புனேயும்
வளையமாமடற்றளைக ளோவத்தொடர்ந்தன
வயிரவாதிகட்களவி னிணமுமுனுமிக்குதவும்
வலியபோரினுக்குரிய வீரத்தமுந்தின
மனதுவேறுபட்டிடுத லிலதுநாடிநிற்பவர்கண்
மறலிதூதருக்கயர்வு றுமற்றிரிந்தன
மலையிலேறிமுற்புவியி லுருளுமாணவச்சிறுவன்
மடிவுறுதெடுத்துலகி லேவிட்டவம்பின
வரியராவினத்தரசர் பலர்சொனுலுமுற்றுதலின்
மகிமையாண்மையொப்பனவெ லாமுற்றடர்ந்தன
வளமைசேர்திருப்புகழை மொழிகுவார்களுக்கெளிய
மயிலமாமலைக்குமரன் வாகைப்புயங்களே (கஉ)

வெண்பா.

புயலார் மயிலமலைப் புண்ணியமே போல்வான்
கயலார்கண் வள்ளி கணவ—னியலாரப்
பாடுமடி யேன்றனக்குப் பத்தர்மனப் பங்கயந்தோ
ளுடுமடி யேன்றமாட் டான். (கங)

கட்டளைக்கலித்துறை.

மாட்டாதவென்னை வலியவந்தாட்கொண்டு வண்கமலத்
தாட்டாமரைத்தொண்டு செய்யென்னமுன்புதடுத்து நின்றான்

கேட்டார்மகிழ வரங்களெல்லாந்தருங் கீர்த்திகொண்டு
பாட்டா லுயர்மயி லாசலத்தோங்கயிற் பண்ணவனே, (கச)

அறுசீர்விருத்தம்.

பண்குலவுசெந்தமிழா னின்கமலத்திருவடியே பரவுமென்முன், கண்குலவுதோகைமயிற் பரிமீதிலொருதரநற் காட்சியீந்தாள், பெண்குலவுமொருபாகப் பிஞ்ஞகனுக்குபதேசம் பேசும்வாயாய், திண்குலவுமயிலமலைக் குருபரனே வேலணியுந் திரடோட்சேயே. (கரு)

எழுசீர்விருத்தம்

சேயமாமுகங்க ளாறுடைக்குமர தேசிகன்றிருக்கை வேற்பெருமான், றாயவெண்சேவற் கொடியணிந்தாடுஞ் சுப்பிரமணியனையன்றி, மாயவன்பரமன் கணபதிமுதலாம் வானவரிலையெனவுணர்வார், தாயகமான மயிலமாமலைச்சீர் சாற்றிடத்தக்கவரிவரே. (கசா)

எண்சீர் வண்ணவிருத்தம்.

தனன தந்ததன தனதன தத்தன.

எவர்களும்புகழு மயிலமலைக்குக னெனமொழிந்தவன திருசரணத்திடை, தவமுயன்றுறையு மனமுளவித்தகர் தமையடைந்தவர்கள் பெறுவனசெப்பிடி, லவனியெங்குநிறை தருபுகழ்சத்திய மதிவிதங்குலவு மதுரநயத்தமிழ், சிவன்முகுந்தனயன் மகபதிபோற்பவர் திறமையின்பமலி சமரசமுத்தியே. (களஎ)

இரங்கற்றாழிசை.

முத்தயணிபநகைமடவீர் மொழியக்கேளீரென்கனவின், முன்னமொருநாண்மயிலமலை முருகக்கடவுள்வலியவந்து, சித்தங்கவர்ந்தான்வளைகவர்ந்தான் சேலைகவர்ந்தான்றிறல்கவர்ந் தான், சிறிதுநாணமில்லாமற் றேடித்திரிந்துதிகைக்கவிட் டான், பைத்தவரவக்கடிதடமும் பணைத்தமுலையுமதவேளும், பரவைத்தொனியும்பிறவுமெனைப் படுத்துந்துயரஞ்சகிக்கறி யே, நெய்த்தகுரவங்குவளைவெட்சி நீபமுதலாமாலைகளி, னே ருமொன்றையெனக்காக நீர்போயிரந்துகொணர்வீரே. (கஅ)

வெண்பா

வீர வடிவேற்கை வித்தகனை வெள்ளிமலைக்
காரன்விழித் தீயில்வந்த காரணனை—நீரருவி
கொட்டுமயி லாசலத்திற் கும்பிட்டுக் கொண்டபின்னு
மிட்டுமயி லாரிடஞ்செல் லேன். (கக)

கட்டளைக்கலித்துறை.

ஏனலங்கானிற் பரண்மீதிருந்த விளங்குறத்தி
பானலங்காமர்க் குருகிப்பணிந்தவன் பண்ணவர்க்கா
வீனலங்காதிபற் செற்றோன்மருக னெனத்துதித்து
நானலங்காண மயிலாசலத்தினை நண்ணினனே. (உ0)

கலிவிருத்தம்.

நண்ணல்கண்டு நமக்குமயிலம்வா
ழண்ணலோர்வர மாயினுநல்கிலான்

கிண்ணநேர்முலைக் கிர்த்திகைபானுகர்
வண்ணவாய்ச்செயல் வன்மையில்வன்மையே. (உக)

கலிப்பா - கைக்கிளை.

வன்ன முலைத்துணையை வாய்மொழியைத் தாழ்குழலை
நன்னயஞ்சேர் கண்ணிணைமிக நம்புமென்னை நத்துகில்லாய்
கன்னல்விற்கை மாரன் கடும்போர் விளைக்கின்ற
தென்னடிநான் செய்வே னெழின்மயிலத் தேந்திழையே.

நெஞ்சுவிடுதூது - தாழிசை.

ஏந்துபூண்முலை யங்கைமார்களை யேவினாலவர் தங்களுக்
கின்பமெய்திட னடிவாடியி றைஞ்சுவாரெழில் வண்டினம்
பூந்துணர்க்கடம் பாரமீதுபொ லிந்ததேன்மிக வுண்டுதன்
புந்தியின்றிம யங்குமஞ்சுகம் பொற்புயத்துற நற்கிளி
வேந்துடன்களி கூருநாரைகண் மெல்லெனப்பக ராதுபோ
மேகமாதிய யாவுமென்றன்வி ருப்பமுற்றுரை யாதவே
மீந்துதற்கரி தாகுமென்றுயர் நெஞ்சநீயறி கின்றையா
னீடுசீர்மயி லாசலக்குக னேரினின்றுநி கழ்த்திடே. (உரு)

நேரிசையாசிரியப்பா.

நிகழ்த்தரும்பெருமை நிலவுதென்மலயத்
தகத்தியமுனிவற் கருளியவீறும்
பண்டுநற்கீரன் பருவரலொழித்துத்
தொண்டுகொண்டவிர்தரு தூயபுகழும்

கருணையேவடிவ மாகக்காண்டரு
மருணையூர்ப்புலவற் களித்தசெந்தமிழுங்
கடனவெழிந்து கரைமடத் தவிர்தரு
திடமலிபாலைப ஞதியசித்த
ரெண்ணிலார்க்குதவு மெழிற்பெருஞ்சிறப்பு
நண்ணிநின்றன்பா ஞனும்வந்தடுத்தே
னென்பெருங்குற்ற மியம்பரிதாயினு
நின்பெருங்கருணை நினைக்கரும்பாற்முற்
றவிர்க்குமென்றுன்னித் தமிழ்கொடுசிறிது
கவித்தொடைவனையக் கருதினனுதலி
னைஞ்சிறக்கலாபத் தணிக்குடைபரிக்கு
மஞ்ஞைவாகனத்நின் மரகதவன்னக்
கிள்ளையோர்பாகங் கிளர்தரவொருபால்
வெள்ளைமால்களிறு மேனுள்வளாத்த
பொன்னிறத்தன்னம் பொலிதரநடுவி
லுன்னியபதினு றுருவிலொன்றெடுத்துச்
சேவலுந்தண்டுந் திருக்கைவேலும்
பாவலர்பனுவல் பகர்வனபிறவுந்
திகழ்தரவந்தருட் சேவைநல்கிப்
புகழொடுதவமும் பொருந்தவைத்தருள்வாய்
தென்னையுமாவுஞ் செருந்தியுங்குருந்தையும்
புன்னையும்பிறவும் பொலிதருசாரற்
குயிலினம்பாடக் குரங்கினங்கொட்ட

மயிலினமாடும் வளந்திகழ்மயில
மாமலைக்கோயில் வயினினிதமருங்
கோமளக்குமர குருபரக்குகனே. (உச)

வெண்பா.

குகனே மயிலமலைக் கோமானே யீசன்
மகனே யெனத்தினமும் வாழ்த்தி—முகமாறும்
பன்னிரண்டு தோளும் பதமிரண்டு நாடுநர்முன்
னென்னிரண்டு கைகுவியு மே. (உரு)

தழை - கட்டளைக்கலித்துறை.

குவிக்குங்கைத் தொண்டரைக் காப்பான்மயிலக் குவட்டிறைவன், செவிக்கென்றுயரமெல் லாமுரைத்தாடருஞ் செய்யதழை, கவிக்கின்றதிங்கட் குடைமதவேடன் கணையை வென்று, புவிக்கண்ணிறைந்த புகழ்வானத்தூடும் புகச் செய்ததே. (உசா)

மடக்குக்கோச்சகக்கலிப்பா.

புகழனந்தமுறவாக்கும் பொருளுநல்குமுறவாக்கு
மிகலறுக்குமயிலமலை யிடமுஞ்சேர்க்குமயிலமலை
மகனெனினுங்களித்தாளும் வண்கொடிதாங்களித்தாளு
மிகவணிதற்செயவேளே வினைவிலக்குஞ்செயவேளே. (உஎ)

கலிவிருத்தம்.

வேளைக்குத விடுமெய்ப்பொருள் வினைவேரற வென்று
தாளைத்தலை மிசைவைத்தரு டருசண்முக முருகோன்

வாளைப்பொரு கண்ணாருடன் மகிழுந்திரு மயில
நாளைக்கெனு மொழியின்பப னணுகச்செயி னலமே. (உஅ)

அறுசீர்விருத்தம்

நலங்குலவுமயிலமலைக் குமரேசன்றிருவடியை நண்ணி டாம, விலங்கடொறுஞ்சென் றிரந்து பட்டசளமித்தனையென் றியம்பப்போமோ, கலங்கரியநெஞ்சகத்தோ டாறெழுத்தைத் தினந்தோறுங் கருதியன்பாற், றுலங்குபுகழ்க்கடன்மூழ்குங் கவுமாரர் வேடமிகத் தோய்ந்த நானே. (உகூ)

எழுசீர் விருத்தம்,

நானுநீயுமற் றனைத்துமொன்றெனப்பல ஞானநூல் சொலக்கேட்டு, மூனுமாவியு மொன்றெனுந்துணிவுகொண் ழெனறிடவிடலாமோ, தேனுமாவுமுன் றருமொருகுறமகள் சிறுபதம்பணிந்தோனே, வானுளார்வரும் பொழின்மிகுமயி லமா மலையுடைக்குகவேளே. (௩0)

எண்சீர்விருத்தம்

வேள்விடும்பூங் கணைகள்வந்து தைக்கமேனி
மெலிவடைந்து வெண்ணகைவாய் மின்னாருண்கண்
வாள்விடத்தா விறந்தமுதாற் பிழைக்குஞ் சிந்தை
வசமாமென் றனக்கிரங்கா வன்மையாதோ
கேள்வியுற்ற நிந்தைமொழி போதாதேயோ
கிளிதானென்றெனைப்பலகால் கிளத்திலாயோ

கோள்விலக்கு மயிலமலைக் கோயிலானே
குன்றுதொறுநடமாடுங் குலத்தாட்கோவே. (௩க)

மடக்குநீகட்டளைக்கலிப்பா.

கோவில்கொண்ட குறிஞ்சியிராகமே
கூறக்கேட்கை குறிஞ்சியிராகமே
வீவின்மேனி முதிர்ந்தவராகமே
வென்றுமீண்டதெதிர்ந்தவராகமே
காவிசெங்கடம் பம்புயமாலையே
கானவள்ளிக ணம்புயமாலையே
யாவியென்பவர்க் காட்சிமயிலமே
யன்பர்வேண்டருட் காட்சிமயிலமே. (௩உ)

நூறளடிவஞ்சிப்பா.

மயிலெனநடித் தயிலெனவிழித்
தொயிலுறநடந் துயிர்கவர்பவ
ரிருபூண்முலைக் கருதாமருண்
டருளாவலற் றிருள்பாழ்மனம்
போலும்பதஞ் சாலுங்கவி
மாலுண்டுளார் பாலுந்தினந்
தேனெனவினித் தூணையுமுருக்
கீனமில்கவி யானவில்கிலே - னிதனுற்
செந்தகைக்கிரியெனச் சிகிமேல்
வந்தருள்செயத்தகு மயிலத்தரசே. (௩௩)

பதினான்குசீர்விருத்தம்.

சேயநின்முகங்கள் பூதமோரைந்துந் திகழ்படிப்பிரமமு மாகுந், திறன்மலிதிரடோ ளகம்புறமெனநூல் செப்பியபன் னிருசமையந், தூயவர்விரும்புந் திருவடித்துணைபல் சுருதி யாகமப்பொருண்முடிவு, துங்கவேலுலகைத் தருமவண்மற் றுஞ் சொலும்படையுருத்திரத்தலைவர், மாயவன்முதலோர் வணங்கிடுமொருவன் மயிலுடன்சேவலுமீசன், மலயமாமுனி வன் பாலையனையார் வழிபடுஞ்சீடரிவ்வாறே, யாயசீரனந்த முடையநீயெளியேற் கருள்செயாதிருப்பதுமுறையோ, வரு விசூழ்மயிலா சலப்பெருங்கோயிற் கழகியகுமரநாயகனே.

வெண்பா.

நாயிற் கடையாகி நானிலத்து ரக்தனைக்கும்
போயிற் றெருமிரக்கும் பொல்லேன்றன் — வாயிற்
றமிழ்மணக்கச் செய்தபிரான் றையனல்லார் கொங்கைச்
சிமிழ்மணக்குந் தென்மயிலச் சேய். (௩௫)

கட்டளைக்கலித்துறை.

சேயிலங்குந்திரு வுள்ளமுள்ளீரொன்று செப்புகின்றேன்
கோயிலங்குன்றக் குறிஞ்சியெங்கெங்குங் குறுகினொந்து
வாயிலங்குன்றி வருந்தாமலெங்கண் மயிலவெற்பின்
மேயிலங்குங்குமக் கொங்கைமின்னார்பொன் வெறுத்துய்மினே.

மடக்கு - தாழிசையிரங்கல்.

மின்னிலங்கிய வேலனென்சிறு மின்னிணக்கம்வி ரும்பிலான், மேவலார்க்கெம னனவேண்மகண் மேவநாடுத லோர்கிலான், பன்னிரண்டுசெ விக்குகன்சிலர்பனனிடுஞ்சொல்வி ஞவிலான், பாடுவார்க்கருள் கந்தனீங்கிவள் பாடுகண்டுப ரிந்திலான், மன்னிடும்புகழ்ச் சேந்தனேங்கணே மன்னிடும்பைம றுக்கிலான், வாரணக்கொடி கொண்டசேய்முலை வாரணத்துயர் மாற்றிலான், வன்னிசேர்கரந் தண்ணலார்மகன் வன்னிணைப்பைவி டுக்கிலான், மயிலமாமலை வள்ளலியான்பெறு மயிலின்மட்டினில் வஞ்சனே. (௩எ)

அம்மானை- வெண்டளை

வஞ்சமெல்லாந் தீர்க்கு மயிலமலை வாழ்முருகோன்
கஞ்சனரி யீசனுக்குக் கண்டனன்கா ணம்மானை
கஞ்சனரி யீசனுக்குக் கண்டனனே யாமாகிற்
கொஞ்சங் கருமங்கைக் கொண்டதே னம்மானை
கொண்ட தமரக் குலத்தினரா லம்மானை. (௩அ)

தாழிசையிரங்கல்

அம்மானையாடிக்க ழங்காடிமுத்தாடி யணிமேவுடாங்
தாடிச்சிறுரோடு விளையாடி வெயர்வாடி யயர்வின்றியே
செம்மானம்வருமட்டு முச்சில்வைத்தாடிச் சிரித்தாடியென்
சேலைதொட்டாடித் தினந்தோறுமறவாது சீராடுவாள்

பொய்ம்மானுடன்போன வன்றங்கைமைந்தனைப் பொறிமஞ்ஞையிற்
புகழ்கொண்டமயிலாசலச்சாரலிற்கண்டபோதேயெனைச்
சும்மாவிராதேய வன்பாலெனக்கான சொற்சொல்லெனச்
சொல்லத்துணிந்தாளுறங்காளெனெஞ்சந்துடிக்கின்றதே.

வஞ்சிவிருத்தம்.

துடியடிக் களிற்றின் றோழனை
யடியர்சூழ் மயிலத் தண்ணலை
வடியயிற் கரத்து வள்ளலைக்
கொடியமென் றுரைக்கக் கூடுமே. (௪0)

கொச்சகக்கலிப்பா

கூடுமவர்க் கருள்வேளைக் கூடாரைக் கொல்சேயை
யாடுமருட் கொடியானை யாடாம லசைப்பானைத்
தேடுமன்பர்க் கெளியானைத் தேடாரைத் திருத்தானைப்
பாடுநருண் மயிலத்தைப் பாடாதார் பதர்தாமே. (௪௧)

ஊசல் - எண்சீர்விருத்தம்

தாமரைக்கண் முகுந்தனென வளர்ந்துகாட்டுந்
தனிமயிலா சலக்குவட்டிற் றவத்தோர்போலுந்
தூமணிமண் டபத்திவிரு மகளிரோடுந்
துவர்மேனி யெழிலோங்கத் தொண்டர்சூழ
வேமவடம் பூண்டவிர்செம் மணிப்பீடத்தி
லெழுந்தருளி யினியதமி ழிசைகேட்டும்பர்க்

காமவளி ரங்கைவழி யாடலூச
லயில்வேற்கைப் பெருமானே யாடலூசல். (சஉ)

இன்னிசை வெண்பா

ஊசற் குழைமடவார்க் குள்ளத்தை யொப்புவித்து
நாசப் படாத நலமளிக்க வல்லாயோ
மாசற்ற தென்மயில மாமலையில் வண்டுமொய்க்கும்
வாசக் கடம்பணிதே வா. (சங)

கட்டளைக்கலித்துறை.

தேவருக்குஞ்சசி கேள்வன்றனக்குஞ் சிவன்முதலா
மூவருக்குந்துணை யாமுருகாவென்று முன்னுமன்ப
ரியாவருக்கும்பொது வாய்மயிலாசலத் தெய்தினர்க்கே
பூவருக்குந்தள ராவுண்மைஞானப் பொருளெய்துமே. (சச)

கலிநிலைத்துறை

பொருசேவலணிநீடு மயிலாசலத்தெந்தை பொதுவாய்மையிற்
றருசேவையொருவாறு பெற்றோர்மலர்த்தா டலைக்கொள்வதே
குருசேவைமுதலாய பலபேறுமென்னுங் குணத்தோர்களாற்
றிருசேருமருமத்தன் முதலாகநூல்சொன்ன சிலருய்வரே. ()

அறுசீர் விருத்தம்

உய்பநல்வரந்தந் தாட்கொண் டுலகரோடுழலாவண்ணஞ்
செய்பநின் புகழேநாடுஞ் சிந்தையுந் திகைக்கலாமோ
பையர வருந் துந்தோகைப் பரிநடம் பயிலுஞ்சோலை
மையறு மயிலக்குன்றில் வதிதரும் வளமையானே. (சரு)

பாண் - தாழிசை.

வளமலிந்த மயிலவெற்பின் மன்னரென்னை முன்னைநாள்
வலியவந்தி ரந்தணைந்த வண்மையொன்று மறிகிலா
யளவிலாத வுண்மைசொல்லி யவைமறந்து வஞ்சமா
யவரிருக்கை நீதமென்ற றைந்திடத்த காதடா
பளபளத்த வேலணிந்த பன்னிரண்டு தோளிலென்
பாவிநெஞ்சி ருந்தும்வேறு பாவைமாரை நாடினர்
களவினீயு ரைத்ததூது போதுமீதில் பாணபோய்க்
கந்தர்பாலு நெஞ்சறிந்த கன்னியென்று பன்னிடே.

தவம் - வேற்றொலிவெண்டுறை

பன்னிரண்டுதோளானைப் பவளமலையனையானைப் பழுதிலாறு
சென்னியுடைக்குருபரனைத்திருமயிலக்கிரிபுரக்குஞ்சேயைநாளு
முன்னியுன்னி யுறங்கியுறங்கிடா
நன்னிலைத்ததவ ஞானிகட்கானதே. (௪௮)

எண்சீர்விருத்தம் - கட்டு

ஆனையுருவானதிரு ஞானமிசை தோன்று
மழகியசண்முகத்தொருசெங் குழவியினைமுன்னாள்
பூனையுய்யச்செய்தானைத் தேனைநிகர்பாடற்
பொழிவாருக்கருள்புரியும் விழிமூவாறுடைய
கோனைநெடும்பனிவரையின் மேனைமகடன்னைக்
கொற்றவைவேலெனக்கரத்திற் பற்றவல்லருகனை

மானையொகரும் விழியார்கண் டனமுறப்பவனி
வரும்பரனை மயிலவெற்பில் விரும்பியதென்மனமே. (சகூ)

இரட்டையாசிரியவிருத்தம்

மனமுனதுதிருவடியை யல்லாதுமற்றென்றின் மருவா திருக்குமியல்பும், வாக்குனதுபுகழன்றி வேறுவிதமொன்றை யும்வ ழுத்தாதவண்மைநெறியுங், கனபணியுனக்கன்றிவே றொருவருக்குழயர் காயமுயலாதநிலையுங், கமழும்பனீரிலை யில் வைத்தவெண்ணீறுகொடு கடையனேற்கமையவருள் வாய், புனமறமடந்தையொடு பொன்னகர்ப்பிடிதழுவு புய நிரைபொலிந்தபுனிதா, புனலிகுரவங்கடம் பிந்தீவரஞ் செச்சை பொற்பணியுடன்புனைந்தா, யனவரதநடநவிலு மாக தமயூரத்தி லயில் வேலெடுத்துவருவா, யணிமயிலமலையினது தலையினிதம்விளையாடு மானந்தமுருகேசனே. (ருo)

வெண்பா.

ஏசகன்ற பல்பாட் டிசைந்தபுகழ்த் தோள்களிலென்
மாசடைந்த சொல்லும் வனைவானே - யீசனுக்குச்
சொன்னதனைக் கிள்ளையொடுஞ் சொல்லிமயி லாசலத்தின்
மின்னவிர்வேல் பற்றிநிற்கும் வேள் (ருக)

கட்டளைக்கலித்துறை.

வேளஞ்சித்தன் னுருமாறித்திரிய விளங்கெழிற்சேய்
வாளஞ்சிறந்தகண் ணார்நடமாடு மயிலவெற்போன்

காளஞ்சிறிதுமில் லாப்பொருள்கேட்டுய்ந்த கண்ணுதல்பாற்
றுளஞ்சிவிகைபெற் றுத்துதிபாடிய தன்மையென்னே. (ருஉ)

கலிநிலைத்துறை

என்னேயமு நின்றிருக்கூத்து மிரண்டுமொன்று
யின்னேகளி கூரவைக்குந்திற வில்லைகொல்லோ
மின்னேர்சடை யான்முதலாகிய மேலவர்க்கோர்
மன்னேமயி லாசலக்கோயிலில் வாழ்பிரானே. (ருங)

அறுசீர்விருத்தம்

இரங்கல் - சிலேடை

வாழுங்கிளையி னிலைநீங்கி வளர்மென்முகையா முலைபசந்து
சூழுமனையா ரிடைநாணிச் சோர்ந்துவாடித் தளர்வெய்தி
வீழுங்காய மிகக்காய்ந்து வேனிற்சகியா வியன்கோங்கென்
பாழுமகள்போன் மயில்மலைப் பவளக்குகன்மால் படைத்ததுவே.

கலித்தாழிசை.

படையாலொரு முதுசூருடல் பப்பாதிய தாகப்
பண்ணுங்குகன் மயிலாசல நண்ணுங்களி யுடையே
மூடைநாறிய வூனுண்பவர் முன்னேகியு நில்லே
முதிர்செந்தமிழ் பொழியுஞ்சில முனிவர்க்குற வாவேம்
விடையேறிய பரமன்றலை மீதேமுப லகனும்
விறன்மாயவ னதுசெங்கையின் மிளிர்கின்றவை வேலு
மடையாளமெ னக்கூறிடு மவருக்கிழி வுரையே
மயன்மாதைவெ றுக்காதவ ரறையும்புகழ் நமதே. (ருரு)

எழுசீர்வண்ணவிருத்தம்.

தன தந்தன தன தானன—தன தானு.

நமனஞ்சியபெரியோரவர் தவமிஞ்சியபயனுமென
நவிலும்பனுவலைநாடொறு—மிகழ்தீயோர்
தமரென்றுழல்வதுபோயநு தினநின்பணிபுரிவேனொரு
தரமிங்கிதமயின்மேலெதிர்—வருவாயே
குமரன்குருபரன்வேள்குகன் முருகன்சரவணநீர்தரு
குழகன்றுணை யெனவோதுநர்—செவியூடே
யமலன்பெறமொழிதாரக விபாஞ்சொலிமயிலாசல
மதினின்றருள்பொழிசீர்திகழ்—கிழவோனே. (ருசு)

மருட்பா.

கிழமுனிவன் வேடமிட்டுக் கேகயத்தை விட்டுப்
பழகிவசஞ் செய்துகுறப் பாவை—குழல்சரியச்
சேர்ந்தளி கூர்வான் றிகழ்திரு மயிலத்
தார்ந்தமெய் யடியவர்க் கஞ்சிக்
கூர்ந்தபூங் கணையான் கும்பிடல் வியனே. (ருஎ)

கழிக்கரைப்புலம்பற்றுழிசை—மடக்கு.

வியனார்கமலமலரினமே விளம்புமுலகமலரினமே
வெள்ளைநிறத்துக்குருகீரே வேண்முனிறத்துக்குருகீரே
கயலின்குலமேகேதகையே கருத்தைச்சுடுமேகேதகையே
கருங்குவளையேகட்டுரையே காணேன்வளையேகட்டுரையே

புயல்வந்தருந்துங்கசப்புனலே பொருந்துமுறவுங்கசப்புனலே
புளினத்திடரேயளப்புனையே பொல்லாதிடரேயளப்புனையே
வயமிக்குளவன்பேரொலியே மயிலத்தொருவன்பேரொலியே
மயலினிலையஞ்சகியேனே வந்தாளிலையஞ்சகியேனே. (௫௮)

வெண்பா.

ஏனமற மங்கைவைவேற் கிட்டானை யீடில்பசுங்
கானமற மங்கைவைவேற் கைக்குகனை—ஞானமற
மங்கையத்த ரேயா மயிலத்திற் கண்டுசென்னிக்
கங்கையத்த ரேயா கலாம். (௫௯)

கட்டளைக்கலித்துறை.

கலையானவத்திர வாணிபுகழுங் கவின்மயில
மலையானவத்திர வாணிந்தையேனையும் வாழ்விக்கும்வே
ணலையானவத்திர வாணிபங்குன்றொடு நந்தவென்றூ
னிலையானவத்திர வாணித்தர்போலு மியல்பினர்க்கே. (௬௦)

அறுசீர்விருத்தம்.

இயல்வளமுமலைவளமும் பொழில்வளமும் புனல்வளமு
மிமையார்போற்றும், புயல்வளமுமற்றுமுள்ள பலவளமுந்
திகழ்மயிலம் புரந்தசெவ்வேள், கயல்வளங்காட்டியநெடுங்கட்
குஞ்சரிக்குங்குறமகட்குங் கணவன் செந்நெல், வயல்வளத்
தண்மருதமுத னிலத்துஞ்சென்றுடி வருதலுண்டே. (௬௧)

ஊர் - எழுசீர்விருத்தம்.

வருமமின்றிய தொண்டருக்கருட்செயு மயிலமாமலைச்
சேய்க்குத், திருநிலாவிய பரங்கிரியேரகஞ் செந்திலம்பதி
சோலை, மருவுமாமலை யாவினன்குடிமுதல் வண்டமிழ்ப்புல
வோர்சொல்,பொருவிலாயிரங் கோடிகளாகிய பொருப்பெலாந்
தனதூரே. (௩௨)

அடிமடக்குக்கோச்சகக்கலிப்பா

தனம்பகமா னவர்மீதே தனம்பகமா னவர்மீதே
வினம்பரவு பதியென்று வினம்பரவு பதியென்று
வுனம்புயத்தாட் டுதியாதோ வுனம்புயத்தாட் டுதியாதோ
கனம்படரு மயிலமனே கனம்படரு மயிலமனே. (௩௩)

சித்து - தாழிசை

அமலன்புகழ் மயிலாசல மயில்வாழ்சிவ ஞானிக்
கருள்செய்தயி லணிதோளுடை னருகிற்றிகழ் சித்தன்
றமரென்றுள பலசித்தர்க டந்தாண்மலர் மகரந்
தலையிற்புனை தருசித்தர்த மைப்பேணிட லுள்ளே
மெமதன்பைவி டாதேபல மீயங்கொடு வந்தா
லெண்ணூறுவ ருடமாயுளி லங்கச்செய வல்லே
முமலத்தடை யறியேமிரு நாகந்தரு வாயேன்
முன்கட்டிவெ ளுக்கச்செயு முறையுந்தெரிவேமே. (௩௪)

இதுவுமது - எண்சீர்விருத்தம்

வேமப்பான் முழுக்காட்டி யாடைசாத்தி
வெண்ணீறு மிகப்பூசி வேணமட்டு
மேமப்பாத் திரத்திலன்னம் பருப்புநெய்பா
லிருமூன்று சுவையுடனீ யீந்தாயானு
லியாமப்பா லியைந்தரச வாதஞ்செய்வோ
மிராப்பகன்மா றிடப்புரிவோ மிவையல்லாமற்
சேமப்பாங் குறுமயில மலைப்பொற்கோயிற்
றிருக்கைவேற் சித்தர்தம்பேர் செப்புவோமே. (௬௫)

வெண்பா

செப்பரிய பல்சீர்த் திருமயில மாமலையிற்
றுப்பனைய மேனிச் சுராதிபனை—யெப்படியுங்
காணும லென்றன் கலிதீர மாட்டாது
நாணும லுந்திரியே னன். (௬௬)

கட்டளைக்கலித்துறை

நானங்கமழு மயிலாசலத்தி னடிக்குமருட்
கோனங்கமழு மயிலாசலத்தினர் கும்பிடுந்தா
ளானங்கமழு மயிலாசலத்தின னன்றடற்சூர்
மேவனங்கமழு மயிலாசலத்தினல் வீட்டிடுமே. (௬௭)

கலிவிருத்தம்.

வீட்டு நேய மிகுந்துனை நாடிடுமென்
பாட்டு மாலை பரிந்தருள் செய்குவையோ

காட்டு வள்ளியைக் காவுடை யான்மகளிற்
கூட்டு வாய்மயி லாசலக் கொற்றவனே. (௬அ)

சம்பிரதம் - தாழிசை.

கொற்ற வர்க்குமுயர் மாதவர்க்குமொரு
கோனெனக்குலவு குமரவேள்
கோழியங்கொடிகொண் மயிலவெற்பிலிரு
கோதையுர்க்குநடு மேவுவா
னற்றமீதெனவ றிந்தளிக்குமுரு
கையனெய்யொழுகு மயிலினு
னம்புயக்கழனி னைந்துதெண்டனிடு
மன்புகொண்டுதமிழ் பாடினுன்
மற்றவர்க்குநிகர் வாழ்வெய்தாதுடலு
மனமும்வெள்ளைநிற மாகிடு
மாநிலத்திழியெ றும்புமோர்பெரிய
மலையெனத்திகழும் விழியினீர்
வற்றலின்றிவரு நல்வினைப்பயனும்
வம்பதாமணியும் வெண்கலை
மண்ணடைந்துநிற மாறுமெண்ணில்பல
வாயிலிற்புகலு மாகுமே. (௬௯)

எண்சீர்விருத்தம்.

ஆகுமதை யழிப்பதற்கு மழிவதனை யாக்குதற்கு
மயில்வேற்கைக் குருபரனை யன்றியிலை யெனத்தேறிப்

பாகுநிகர் தமிழ்ப்பாடல் பலபாடிக் களிகூரும்
பழையோர்கள் பெற்றபயன் படிறேனும் பெறவேண்டி
யோகுடையார் மலிபொதியை யுயர்திருச்செந் தூரருணை
யொளிர்திருமா மலைபொருநை யுருமலையா தியதலந்தோ
றேகுமதிற் சலிப்பெய்தி யெழின்மயிலா சலக்குவட்டி
லின்றுவந்து பாவுகின்றே னினிநடப்ப தறியேனே. (எo)

வஞ்சித்துறை.

அறிஞர்சூழ் மயிலத்
தெறிகதி ரெழிற்சேய்
வெறிகமழ மென்றாட்
குறிகொளல் குணமே. (எக)

மறம் - வெண்பா.

குணப்பிசகுந் தோள்வலியுங் கொண்மறவர் பெண்ணை
மணப்பதற்கு மன்னனிச்சை வைத்தாற் - கணப்பொழுதி
லந்தப் புரத்திருக்கு மாயிழைமா ரெல்லோரு
மிந்தமயி லத்துறுவா ரே. (எஉ)

இதுவுமது கட்டளைக்கலித்துறை.

வார்வேல்புரக்கு மயிலாசலத்து மறவர்கொம்பைச், சேர்
வேனென்றெண்ணு மரசேவுந்தூதருந் தேயவழக், கோர்
வேம்பைக்கட்டுதலன்றோ முன்கற்பகத் தூறெழித்த, சீர்

வேங்கைக்கோவ்வுங்கோன் யாப்பட்டபாட்டைத், தெளிந்து சொல்லே. (எங)

கலிவிருத்தம்.

சொல்லு மாய்ப்பொரு ளான சோதியை
யல்லு மாய்ப்பக லாகி யல்லதைப்
புல்லு மாறெழின் மயிலப்புங்கவ
னெல்லு மாறுமா முகங்க ளோதுமே. (எச)

எண்சீர்விருத்தம்.

ஒருப்பனுவற் றொகையாவையுநின் னுபயக்கழல்சூ டிடு முண்மையுணர்ந், தேதுந்தனதென் றுரையாவழியா லெனை யுந்தருவே னிடையத்தகுமோ, காதுஞ்சிலைவே டர்புனத்தின ளூங் ககனத்தினர்கன் னிகையும்புரியும், வாதுங்களியா கிந டிப்பவனே மயிலத்தொருநல் வரமின்றருளே. (எரு)

மறம் - தாழிசை.

மின்றயங்கும்வடி வேலணிதோளுடை விகிதன்
விரைமலிந்தபணி நீபமுளான்வியன் மயிலக்
குன்றடுத்துமயின் மேல்வரல்கண்டத னாலே
சொண்டமையலென நின்குறிகூறுது கோதாய்
நன்றவன்றருசு கம்பெறுவாய்மலை யாதே
நானுரைத்ததுபொ யல்லநினைமெய் நம்பா

யென்றனக்குநிறை நாழியினெல்லொடு சோறு
மெண்ணெயுங்கலையு மீந்துவிடிப்பொழு தம்மே (எசு)

இதுவுமது - அறுசீர்விருத்தம்.

அம்மாவென்குறி கேளுன் னுக்கஞ்சுந்தர மீகை
சும்மாபோமென்றி ராதே தூயமயில மலைவா
ழெம்மான்றன்புயஞ் சேரு மின்பக்கடலை நல்கு
மைம்மான்கட்புன னீங்கி வருத்தந்தீருள மகிழ்ந்தே (எஎ)

கட்டளைக்கலிப்பா.

மகிழுமாமலர் மாலிகைமாரவேண்
மலயக்காலில் வரக்குயில் வாய்விடச்
சகிடணிந்தையு மம்புலியுஞ்சுடத்
தையல்வாடித் தயங்கிடலாகுமோ
வெகினமூர்தியைக் குட்டியகையனே
யீசன்மால்பணிந் தேத்தியமெய்யனே
முகிலருமயி லாசலத்தையனே
முத்தமிழ்ச்சுவை முற்றுணர்தெய்வமே (எஅ)

இரட்டையாசிரியவிருத்தம்.

தெய்வங்களத்தனையு மொன்றெனவுணர்த்திடத் திருவுரு வெடுத்த தெய்வஞ், சிவசமையமுதலாகு மறுவகைச்சமைய முந் தென்டனிடநின்ற தெய்வம், பொய்வலித்தானவர்கள்

வலியொழித்தமரர்வளர் பொன்னுலகளித்ததெய்வம், பொறி யணையகுஞ்சரிமு லைத்துணைக்களபம் பொலிந்தமார்புடைய தெய்வ, மைவனக்குயிலனைய வள்ளிமின்றந்ததினை மாவினின் மகிழ்ந்ததெய்வம், வண்டமிழ்ப்புலமைதிகழ் கவுமாரருக்கினிய வரமெலாமுதவுதெய்வம், வைவதற்கஞ்சாத கொடியேனை யன்றுதிரு மலைமீது காத்ததெய்வ, மயில்வாகனத்தெய்வ மயி லார்புயத்தெய்வ மயிலாசலத்தெய்வமே. (எகூ)

நிலைமண்டிலவாசிரியப்பா

தெய்வப்புலமையுந் திருப்புகழ்ச்சிறப்பு
மைவகைப்பொறிகட் கடங்காவறிவுந்
தொண்டர்தம்பணியுந் தூயநெறியு
மண்டலத்தரையரும் வணங்குமாண்பு
மன்னபல்சீரு மடைவதுகுறித்து
நின்னருட்பேறே நினைத்துநெட்டுயிர்த்துத்
தோகைமாமயிலைச் சுடர்ச்செஞ்சூட்டு
வாகைவெண்சேவலை வடிவேற்படையை
மூவிலைச்சூல முதிரொளிவயிர
மாவிலம்படல்வாள் வயங்கெழிற்கேடகஞ்
சக்கரஞ்சங்கந் தனிக்கயிறங்குச
மிக்கசீர்ப்பணிகண் மிகவணிந்துள்ள
பவளமால்வரைநேர் பதினறுருவிற்
றவளவெண்ணீற்றுச் சங்கரன்பரவுஞ்

சிற்சிலவற்றொடு தினந்தினங்கருது
நற்செயல்பொலிந்த நாயினேன்மனத்தைத்
தளர்வொடுசலியாத் தகையுறப்புரிவா
னளவில்போராட லலைபுனற்பொருநைத்
திருவுருமாமலை யாதியிற்செய்து
பருவம்வந்தடுத்தது பதறேலென்ன
விருதரங்கூறி யிறுமாப்புய்த்தும்
பருவரன்மிடியிற் பட்டார்போலப்
புல்லர்தம்மனைகளிற் போய்வரவிடுத்து
நல்லறல்கடுக்கு நறைக்குழன்மகளிர்
கணைபிணையிணைவிழிக் காமர்கனிவாய்
துணைமுலையிளநலந் தொய்யின்மென்றோ
ளிருணிகர்வேளர சிருக்கையாதியினு
முறுவரச்செய்தனை யொருகணத்தொருதர
மாதலின்மருண்டன னருணகிரியென்
றோதலும்பிறவு மொளியாவண்ணங்
குழீஇயமுனிவர் குழாத்தொடுமாசு
கழீஇயமதிநிகர் களிற்றிற்றோன்றித்
தகர்கொணர்வீர வாகுத்தலைவ
னிகரெனவிளங்கவெண் ணீறளித்தருள்வாய்
பைம்புயற்புனலைப் பவளமேய்க்குஞ்
செம்புகர்வேழத் திரணெடுந்தடக்கைப்
புனழவழியுறிஞ்சும் புதுமலர்ப்பொதுப்பர்

தழைவளமயிலா சலப்பெருங்குவட்டிற்
குலவுபொன்மதிற்றிருக் கோயி
னிலவுசீர்பொறுத்த நிமலசற்குருவே. (௮௦)

மதங்கம்-வெண்பா.

சற்குருவாந் தன்மைத் தவத்தோர் தமைமறந்து
நிற்கு மிசைமதங்கி நீலவிழி—பொற்குவட்டை
யன்னமயி லாசலத்தா னுறிருதோ ளுடியதா
லின்னமசை யாதிருந்த தே. (௮௧)

இதுவுமது-கட்டளைக்கலித்துறை.

இருஞ்சூலங்கொண்ட வயிரவர்போற்று மிகன்மதங்கி
வருஞ்சூறைக்காற்றெனச் சீறிச்சினந்தழல் வாய்திறந்து
பெருஞ்சூதரான புறமதத்தோர்களைப் பிய்த்தருந்திக்
கருஞ்சூதங்கொன்றபி ரான்மயிலாசலங் காண்பவளே. (௮௨)

இதுவுமது-அறுசீர்விருத்தம்.

பவச்சாதிடாமதங்கி தருநரம்புபஞ்சினுக்கும் பருவநல்கு மவச்சாவாவெய்யின்முள்ளிற் றவிப்பாரைக்கழல்புரக்கு மன் றிப்பின்னுந், தவச்சார்பினுயர்வசிட்டன் கைக்கொண்டான மதனடியார் தவிர்ப்பார்கொல்லோ, நவச்சாமைப்பயிரெள்ளா மயிலத்தானன்பர்சொல்லு நவைச்சொற்கேட்டே. (௮௩)

கலிவிருத்தம்.

சேட்டினுக்கு ளஞ்சிறின் கிளித்தமிழ்ச்சிளைத்துவேன
மாட்டிராங்கி டாதிருக்கும் வல்மையென்ன நன்மையோ
கோட்டினத்து யர்ந்தவண்மை கொண்டதானமயிலம்வாழ்
தாட்டிகச்ச டானனச்ச ரோசமுற்ற தலைவனே. (அச)

எழுசீர்விருத்தம்

தலையாலன்புடனே யுனைச் சந்ததமும்பணிவேன்
முலையானைக்கிடைபோ மன முடமொழித்தருள்வா
யிலைவேல்கொண்டவனே தக ரேறியசேவகனே
யலைசூழ்பார்புகழ்சீர் மயி லாசலவித்தகனே. (அரு)

எண்சீர்விருத்தம்.

வித்தையாலும்வ ருந்திடாதுன்வி ரைப்பதாம்புயம்
வேண்டுவேன், முத்தைவென்றவெ ணீறணிந்தொரு முத்த
முந்தரவல்லையோ, தத்தையொன்றுகு லாவுதிண்புயச் சண்
முகாமயி லாசலத், தத்தைதங்கையொ டாடல்கண்டுவப் பான
சீர்புனை யண்ணலே. (அசு)

பதினேருசீர்வண்ணவிருத்தம்.

தன்னத்தனதன தானன—தந்ததான.

அண்ணற் கொருபொருள்பேசுநின்
வண்மைப் புகழ்மிகவோதியு
மன்னச் சிறுநடையார்மயன் மிஞ்சுதீயேன்

விண்ணப் பமுமுனதாறிரு
நன்மைச் செவியினுளேகியென்
வெம்மைக் கலிகெடுமாறுபு ரிந்திடாதோ
கிண்ணத் துணைமுலைவேடுவ
மின்னுக் கெதிர்பசிமீறிய
கின்னக் கிழமுனியாயுமி ரந்துளானே.
வண்ணத் தமிழ்மயிலாசல
நண்ணித் தொழுமடியார்களை
வன்மைச் சமனணுகாதருள் கந்தவேளே. (அஎ)

பதினறுசீர்வண்ணவிருத்தம்.

தானதனதத்ததன - தன்னதானு.

வேளணிமலர்ச்சமரு மீனமலிவுற்றபுலை
மேவியநெறிக்கயவர் பகையும்வீணே
வீடுதொறலைக்குமிடி நோயுமிகவிற்றமியன்
வேதனைபொறுத்துழல்வ தறிகிலாயோ
காளவிடமிக்கொழுகும் வாயரவினைப்பருகு
கானமயிலிற்கலப நிழலினூடே
காதலிருவர்க்குநடு வேலுடனுதித்தளவில்
காலபயமற்றநிலை யுதவுவாயே
வாளவுணருக்கரச தாமெனமுளைத்தநெடு
மாமரமறக்கறுவு புயவிசாகா

வாரணமுகத்தமைய ஞெரொடுபகைத்துலக
மாதிரமுழுக்கவலம் வருகுமாரா
தாளநிகர்பொற்புமுலை மாதரணைவர்க்குமொரு,
சாமியெனமெச்சிடினு மகிழ்குகேசா
தாரணிதுதிக்குமயி லாசலமுகட்டில்வரு
தாபதர்தமக்கருள்செய் தகையுளானே. (அஅ)

காலம்-வேண்பா

ஆனதா கின்றதினி யாவதெனுங் காலமற்ற
ஞானபரா னந்த நமக்கருள்வான்—வானளவுஞ்
சீரார் மயிலமலைச் செவ்வே ளெனவிளங்கும்
பேரார் குருபரபி ரான். (அகூ)

இதுவுமது-கட்டளைக்கலித்துறை.

பாய்பியதென்றற் கனல்காட்டிமாங்குயிற் பாட்டொலித்து
வரம்பெறுமாநதி நீருண்டவேனின் மயிலமலைச்
சிரம்பனைதாளுடைச் செவ்வேண்மயலிற் செலுத்துமென்றுற்
றரம்படுகார்பனி யென்செய்யுமே. விளந் தையலையே. (௯0)

இதுவுமது-எண்சீர்விருத்தம்.

தையலுக்கு முலையரும்பு முதிராக்காலஞ்
சரசநய மொழிப்பயனுஞ் சாராக்காலம்
வெய்யமதன் கணையெடுத்து வெகுளாக்காலம்
வியன்கழங்கம் மானைமுச்சில் வெறுக்காக்காலம்

பையனைய கடிதடப்பூ மலராக்காலம்
பழையமத நூல்சிறிதும் படியாக்காலம்
வையமுதன் மூன்றுலகுந் துதிக்குந்தொல்சீர்
மயிலமலைக் குகன்மோக மலிந்ததன்றே. (௬௧)

பன்னிருசீர்த்தாழிசை.

மலியுங்கருணை விழியான் வானோர்பரவு பெருமான்
வடிவேன்முருகக் கடவுண் மயிலமலைச்சண் முகவே
ளொலிதங்கியதிண் கழல்சே ருபயசரணங்கருதி
யுருகித்தொழுமெய் யடியார்க் குரியபணிகள் புரிவார்
கலியைமதனை விதியைக் காலன்றனைபுண் மதியார்
கவலைக்கடலிற் சுழலார் கமழ்செந்தமிழ்முற் றுணர்வார்
புலியைக்கரியை யுரித்தார் போலுஞ்சிலரைப் பணியும்
புனிதச்சமைய மாறும் புகழத்திகழ்கின் றவரே. (௬௨)

எண்சீர்த்தாழிசை.

திகழுஞ்சண்முகப் பண்ணவன்வீரஞ் செறிந்தபன்னிரு திண்புயன்றேவர், புகழும்வேலுடைச் சேவகனுண்மை பொலிந்தசேவலம் பொற்கொடிக்கார, னகழுஞ்சாகரஞ் சூழ்புவி மெச்ச வவிர்ந்தசீர்மயி லாசலத்தண்ண, லிகழுஞ்சிந்தையு ளேனையுமாட்கொண் டிடத்துணிந்ததை யாரறிவாரே. (௬௩)

பள்ளு-பதினாறுசீர்த்தாழிசை.

ஆரார்செஞ்சடைப் பரமனார்விழி யழலிலுதித்த முருக வேளகத்தியன்முத லானதொண்டருக் கருள்விளக்கமுன்

குளவிபோலருட் சீர்கொடுநிலவிய
முனிவர்தாண்மலர்த் தூளணிதலையினர்
குலவுபோரவைக் கூடதியுவகையொ டமரேனே
குகுகுகூவெனக் கூவிடுமுனமிரு
சிறகைமோதடற் சேவலையெழுதிய
கொடியையேமிகப் பேசிடுமொருநல மருள்வாயே
சளமெலாமிகக் கோவெனவலறிய
வமரர்கோனுவப் பாகிடநிசிசரர்
தமதுவாழ்வறச் சாடியகதிரயின் முருகோனே
தவளநீறுமிக் கார்திருவுருவின
ரிமயமால்வரைக் கோன்மகள்கணவரொர்
சரபமானவுற் சாகர்முனுதவிய புதல்வோனே
வளமருமலர்ச் சோலையின்மதுவெறி
பெருகுகோடரத் தாலெறிபடுகனி
வகையெலாமிழுத தோடியவருவிகள் பலவாலே
மருதமாதியிற் காதரமெனவளர்
கிரிகளியாவுமொப் பாகிடலரிதெனு
மயிலமாமலைக் கோயிலின்மருவிய பெருமாளே. ( )

தனனத்தனதன - தனதாண.

கடலைப்பருகிய முனியைப்புகழ்பவர்
கழலைப்பணிவது தவிராதே

னளித்தவன், வாரார்பூண்முலைக் குறத்திகுஞ்சரி மருவுந்திண் புயவானவன்-மயிலமால்வரை யருவிநீர்மிக வந்துபாயுநல் வயவிலே, யோருழவர் களித்துலைமயல்கொண் டேப்பமிட்டுவந் தடுப்பதா-லினித்தமொழிகள் பேசிச்சரசத் திணங்கிநாழிகை போக்குறீர், காரார்மென்குழல் சரியப்பெரிய களபமுலைகள் குலுங்கிடக்-கவிழ்ந்துநிமிர்ந்து நாற்றையெடுத்துக் கையானடுமின் பள்ளீரே. (கூச)

சவலைவெண்பா.

ஈரம் பொருந்தா விதயத் தெளியேனை
வாரம் பெருத்து வலிதாண்டா
ஞரம் பொலிமயிலத் தன்பர்பகை மாற்றுதற்காம்
வீரம் பெறுங்கதிர்வேல் வேள். (கூரு)

ஏகபாதம்-கட்டளைக்கலித்துறை.

வேளைக்கருளு மயிலத்தன்றன்னை விரும்பனன்றே
வேளைக்கருளு மயிலத்தன்றன்னை விரும்பனன்றே
வேளைக்கருளு மயிலத்தன்றன்னை விரும்பனன்றே
வேளைக்கருளு மயிலத்தன்றன்னை விரும்பனன்றே (கூசா)

வஞ்சித்தாழிசை.

நன்றேவருகச் சிவபெருமான் ஞானகுருமே வருசமறை நாலுமுணராப் பொருள்வருக நறைப்பூங்கடம்பு மலர்பவளக்,

குன்றேவருக மயிலூருங் குருந்தேவருகக் கனகநகர்க்-கோ
மான்மகள்சேர் குகன்வருகக் குமதநிகணவா வருகவிரைந்,
தின்றேவருகக் களிறேறி யின்னேவருகக் கழறிபவா-றியற்றி
யாள வருகவுன தின்பங்கொடுக்க வருகவருண், மன்றேவரு
கப் பலகோடி மலையாய்வருக வருகவே-மயிலாசலத்தில் விளை
யாடும் வாழ்வேவருக வருகவே. (கூஎ)

எண்சீர் வண்ணவிருத்தம்.

தன தன தன தன தனனு தனனு.

வருபலகனவினி லொருவாசகமே
மகிழ்வுடனுரைசெயு முருகோனிமையார்
தருமகளழகிய குறமாதுடனே
தறுகிய மலைகளி லுயர்வானதுகே
டிருவருள்வளமுறு சிவஞானியைநேர்
சிலர்பிரணவமத னுரைதேறியதா
லிருமையுமெளியவர் பெறுமேன்மையினு
லிசையொடுவளமிகு மயிலாசலமே. (கூஅ)

தூரவை-முடுகுத்தாழிசை.

சலனமற்றதிரு மயிலவெற்பிலரு டழைவுறக்குரவை
யிடுமினே-சண்முகக்கடவுள் வள்ளிகுஞ்சரித மக்கெனக்கு
ரவை யிடுமினே, வலமிகுத்ததொரு சேவல்வேல்கலப மயி
லெனக்குரவை யிடுமினே - வண்டமிழ்ச்சுவைம விந்திடப்பு

வர் வாழ்வுறக்குரவை யிடுமினே, நலமனைத்துமுத வத்தகுந்த சிவ முனிமுன்குரவை யிடுமினே, நானிலத்துயிர்கண் மிடியி லாவுவகை நடுவுறக்குரவை யிடுமினே, குலமறைப்பகுதி யாக மத்தினெடு கூடிடக்குரவை யிடுமினே, கோதையீர்சிறிய கொங்கையீரளவில் குமரியீர்குரவை யிடுமினே. (சுக)

நேரிசையாசிரியப்பா.

மின்னவிர்ந்தாங்கு மிளிர்கதிர்வேலும்
பொன்னவிர்மஞ்ஞையும் பொருதகர்ப்பரியுங்
களிறுஞ்சேவலுங் கழறுவபிறவும்
வெளிறுநீறணிந்த மேனியும்விளங்கப்
பரசிவன்றிருமால் பதுமப்புத்தே
ளரசிலைபோன்றே யவிர்தருமல்குற்
சசிமினுள்கணவ னாதியர்சார்தரப்
பசிமுதலொழிந்த பல்லோர்சூழக்
கந்தநாயகனைக் கவின்றிகழ்பொதியை
மந்தமாருதம் வரப்பெறுமயிலத்
தந்தணர்போற்ற வமர்பெருந்தகையைச்
செந்தகைப்பைந்தகைத் தேவியரிருவர்
நடுவினிதமரு ஞானபண்டிதனை
மடுவினுமொருக்கால் வந்தசண்முகனை
யேத்துவாரேத்து மியல்பினுக்கிசைந்த
நாத்துணைவாணி நவைதவிர்முதுநூல்

கறநுழிவணங்குங் கான்மலர்படைத்த
முற்றுணர்புலவனை முருகக்கடவுளைக்
கனவினுநனவினுங் கண்டுவப்பெய்திச்
சினமறக்களைந்து திரும்பாமுத்தி
வீட்டுறக்கருதி வியன்றமிழ்மொழியாற்
பாட்டுரைத்தணியும் பழங்கவுமாரர்க்
கணிமலர்ப்பொதும்ப ரடர்ந்தபல்குறிஞ்சியும்
பிணியறுத்தழியாப் பெருமைநல்கும்
புனிதப்பூசையும் புரைதவிர்நாட்டமுங்
கனியுமெய்யுணர்வுங் கழிக்கருந்திருவே. (௱)

முற்றிற்று,

வேலுமயிலுந்துணை.

வெண்பா.

மயிலமலைக் கோயிலுக்குள் வாழ்முருக வேளைக்
கயிலதனைப் போற்றுமவ னன்பாற்—பயிலுங்
கலம்பகத்தைக் கற்குமவர் கல்வியறி வென்னு
நலம்பகம்பெற் றுய்யு நரர்.

சிவ சுப்பிரமணிய குமரகுருபர முருகக்கடவுள்சகாயம்.

வாழி.

எண்சீர்விருத்தம்.

அழகியசண் முகத்தொருமெய்க் கடவுள் வாழி
யமரர்குலா திபன்வளர்த்த வணங்கு வாழி
குழலுடைப்பூங் குயிலனைய குறத்தி வாழி
கொற்றவைவேன் மயில்சேவற் கொடிச்சீர் வாழி
பழமறையோ விடுமயிலப் பொருப்பு வாழி
பத்திநெறிக் கவுமாரப் பண்பு வாழி
மழவிடைக்கோ னனையசிவ ஞானி வாழி
வையகமும் வானகமும் வாழி மாதோ.

குருபாதமேகதி.

தெய்வமே துணை.

உ

முருகக்கடவுடுணை.

மயிலாசலத்திருப்புகழ்.

காப்பு—வெண்பா.

அயிலத்த னாறுமுகத் தைய னனந்தஞ்
சயிலத்தி லாடுந் தலைவன்—மயிலத்துச்
செவ்வேண் மகிழத் திருப்புகழாற் போற்றுதற்குக்
கைவேழ மாமுகத்தோன் காப்பு.

நூல்.

தனதனதத்தனதானன - தனதானா.

பருவமதிக்கிணையாமெழில்
வதனமலர்த்தொகையாறுடை
பழுதறுசெச்சைகுலாவிய மலைபோலே
பகர்தருபொற்புறுமாறிரு
புயமுமிரட்டையதாமுயர்
பதமுநினைத்துருகாதவெ னெதிரேநீ
திருமுடிவச்சிரவாகுவ
லயநிரைகொத்துமதாணிகள்
சிறுமணிகட்டரைஞாணிகர் பணியோடே

மயிலாசலத்திருப்புகழ்

திகழ்மயில்குக்குடகேதன
மணியவைதொட்டிருமேபெரொடு
சிகிமுதுகிற்றருசேவலவபு முளதாமோ
குருமணியொத்தொளிர்கோமள
வடிவமுடைக்குமராவட
குவடெனும்விற்குரியார்பணி குகவேளே
குமரியொருத்திவிசாரமொ
டுருகவனத்திடைபோயொரு
குறமகளைத்தெழுமார்வம துடையோனே
மருமலிகற்பகநீழலி
லரசுசெலுத்தும்வலாரிதன்
மதலையிடத்தின்முனோர்மொழி பகர்வோனே
வரியளிமொய்த்துளதாமரை
யணிமிகுபற்பலவாவிகொண்
மயிலமலைக்கரசாகிய பெருமாளே. (௧)

தனனதானனத்தானனதனதன - தனதான.

களபபூதரப் பூண்முலைமகளிரை
வழிபடாதுனக் கேபணிபுரிபவர்
கருணைஞானவித் தாகியபிரணவ முணரேனே
கடுவைநேர்மொழித் தீமிகவுடையவர்
மனைகடோறுமுற் றுயிரநயமொழி
கழறுநாவலர்க் கோரிடியெனமிக மிளிரேனே

கதிபெற்றுன தருள் வெளியிற்புகுமவர்
கவிதைச்சுவையினை யிகழாதே
சுடலைப்பொடியணி சிவனைப்பரவிய
சுகுணக்கவுணிய முனிபோலே
துரிதத்தமணர்க ணிகர்துர்ச்சனர்வலி
தொலையச்செயும்வர மருள்வாயே
விடலைக்கனிபய ருெடியற்கினியவர்
விழையத்தகுமொரு துணைவோனே
விரைமுற்றியகுர வலர்பொற்புறுபுய
மிசையுற்றிலகிய கிளிமேயோனே
நடலைக்கவுரவ ரவையிற்செலுமிரு
நளினக்கழலினன் மருகோனே
நதிபற்பலதரு மயிலக்கிரிமிசை
நடமிட்டருளிய பெருமாளே. (௩)

தனதானதத்ததனதன-தனதான.

பழகாத துட்டர்மனதையும்
விழியாலு ருக்கிநலநுகர்
பழிகாரி கட்குமலர்கொடு திரியாதே
பலியோடு பற்றிமகிழ்வுறு
பெரியோரை நித்தமிகழ்பவர்
பகர்வாச கத்தைநலமென மதியாதே

பழகான புட்பவகைகொடுன்
வடிவேனி றுத்திவழிபடு
மதுநீதெ னச்சொல்பவர்களை மருவாதே
யருணச லத்திலுளவொரு
முதுகோபு ரத்தினடியினி
லடியேனி டத்தின்மொழிதலை யருள்வாயே
குழகாகு றத்திமுலைபுணர்
முருகாம லைப்பெணுதவிய
குமராவெ னச்சொல்புலவரை யகலானே
கொதிநீர்பெ ருக்குகடலிடை
துயில்வானு ரத்தில்வளரொரு
குலமாத ளிக்குமிருவர்கண் மணவாளா
மழமால்வி டைக்கணநுதின
மிவர்வார்து திக்தபொழுதினின்
மறைநூன்மு கத்திலுளபொருள் பகர்வோனே
வருவார்நி னைத்தபடிவர
மருள்சீர்பொ றுத்துவளமலி
மயிலாச லத்திலுறைதரு பெருமாளே. (ச)

தந்தத்தானதன தானதன தானதன-தனதான

அஞ்சப்பெடையனைய தாகுநடைமாதரொடு
கொஞ்சிச் சீராடுவத னுலறிவுமாறியுன
தன்பர்க்காகாதகொடி யோனெனநலோரிகழ மெலியாதே

யம்பொற்பாராள்கிறவ லாரிமுதலோர்கதியை
நம்பித்தீவேள்வியினி லாருயிர்கொல்வார்பலரு
மஞ்சப்போராடுமறி வாளர்புகழோதுநல மறவாதே

வஞ்சத்தோர்வாழுமனை வாசல்களிலேகியடல்
வென்றித்தோள்வீமனெடு மால்விசையன்மாரனெனும்
வம்புக்காளானகவி வாணருடனேதினமு மிகலாதே

மஞ்சைப்போலேயிலகு தோகைமயின்மீதிலிரு
பங்கிற்றேவானையொடு வேடமகண்மேவவெதிர்
வந்துற்றோர்நாள்கனவிலோதியவினோதமதை யருள்வாயே

கஞ்சப்பூமீதுவளர் நான்முகனைமோதியொரு
குன்றிற்கூடேகதறி வாடவிடுமேன்மைபெறு
கந்தப்பாவாள்வலிமை தோயுநவவீரர்பணி துணைவோனே

கங்குற்போலாகமுறு சூரன்முதலாமவுணர்
மங்கிப்பூலோகமொடு வானுலகும்வாழவொரு
கங்கைச்சேயாகிவரு ஞானமணியேயிறைவர் குருநாதா

நெஞ்சத்தாலேகருதி டாதபலவாறுவரும்
விந்தைக்காராதிருவெ ணீறணியுமேலவரை
நிந்திப்பார்காலனிக ரானகவுமாரரொடு திரிவோனே

நிம்பத்தார்சூடவுமு ளிசைகுவாயளவில்
குன்றத்தானேமயில மாமலையிலேமிகவு
நின்றெற்போல்வார்பிழைபெலாநலமதாகவருளபெருமாளே.

தனனதன தனனதன தனனதன தனனதன
தனதானதத்ததன தனதானதத்ததன தனதானா.

அறிவையறி வருபிரம நிலையெனுநன் முனிவரடி
பணியாதெ திர்த்திகலி யிகழாண வத்தினரு
மிடியினிடை மறுகிவரு மிரவலர்கள் விழைதலொரு
கடுகாமெ னப்பெறவு முதவாதொ ளிப்பவரு
மநுதினமு மடமகளிர் கலவிநல மெனவுருகி
வழிபாடி யற்றுநரு நிகரான துட்டர்மகிழ்
வடையாதே
யபரிமித மதுரநய குணமருவு கவிதைபல
தமிழாலு ரைத்துமலை தொறுமேகும் விற்பனரும்
விதிதவறி யளவிலுயிர் பதறியமு வதுபுரியு
மவர்வேர றுக்குமெம னெனும்வீர முற்றவரு
மரியவள மருவுபொழில் குலவுபொதி யையிலுறையு
முனிவோன்ம லர்க்கழலை மறவாத பத்தர்களு
மெலியாதே
பிறிதிணையி னடனமர கதமயிலின் முதுகிலிரு
மடவார்த மக்கிடையி லயில்வேல்பி டித்தமரர்
முனிவர்முத லினர்பரவ வொருபவள மலையதென
முகமாறும் வெற்புறழ்ப னிருதோளு மிக்கொழுகு
மிரசமது வுளகமல மலரணைய துணையடியு
முதலாமு றுப்புமுழு மையுநேர்வ ரக்கருத
லறியாயோ

பெரியதிரு மலைமுகடு இடுகிடென வுருள்பொழுதி
லுயிர்போயு டற்றசையை நரிநாயு ணச்செயினு
மருணைமுது சிகரிவட வருகதனில் வருபொழுதி
லருள்வாழ்வ ளித்திடினு மடியேனி ழைத்தபல
பிழையுநல மெனவுலகு மொழியுமிவ னுழலும்வினை
யணுகாதி னித்துயரி லமிழாதி ருக்கும்வகை
புரிவாயே
மறியைமழு வினையபய வரதமுட னணிதருகை
யொருநாலு டைப்பரம சிவனுமெ திர்த்தமத
னிருளுடல நொடியிலெரி படமுனியு மழல்விழிகொள்
பெருமானு மைப்பெண்மலை புணர்தோளு டைப்புனிதர்
மதகரியி னெடுபுலியை வதைபுரியு மிறைவாத
ளணிவார்கொ ழுத்தனது செயலான திற்சிறிது
பகர்வோனே
வகுளமணி தருபுலவன் முதலினர்சொல் கவிபுனையு
நெடியோன டற்றகுவர் குலகால னுத்தமுகி
லலைகடலி னிடைநெளியு முரகவணை மிசைதுயிலும்
விழியான்வ ரைக்கவிகை கொளுமாயன் மிக்கபுகழ்
மலியுமுர கரிகொடிய கனகனுடல் கிழியவென
வொருதூணி டத்தில்வரு திருமால்வி ருப்பமுறு
மருகோனே
குறிபகரும் வனசரர்த மிதணிலுறு சிறுமிதரு
தினைமாவி னிற்பிரிய மிகுகோம ளக்குமர

னடியவரை யிகழுமவர் குலமுழுது நசியவென
வருகோப மிக்குடைய முருகோனு ரைக்கரிய
குகைகடொறு நடநவிலு மிருசரண முளகடவுள்
குகுகூவெனச்சிறகை யறைகேத னத்தனெனின்
மகிழ்வோனே

குறைவில்வள மலிபொழிலு ளிமையவர்கண் மகளிரொடு
விளையாடி டக்கரிய நிறவேடர் கைச்சிலையொ
டிபலையென வணுகவவர் மகளிர்நகும் வியன்மருவு
குளிர்சார லிற்றவசு புரிவார் பழக்கமது
கொடுகிளிகண் மறைபயிலு மயிலமலை தனிவிணையில்
குருவாயெ மக்கினிய சிவஞான வித்தைதரு
பெருமாளே. (சு)

தனன தானன தானன தானன—தன தான.

கரியமேய்நிக ராமதவேள்விடு கணையாலே
கவலைநோய்மலி வாய்மடமாதர்முன் மறுகாதே
கிரிகடோறுநி னுளெனநாடித முறுமாறோர்
கிளியெனுமிக வோதியவாய்மொழி பிழைதானோ
சரிகுலாவிய தோளுமையாளருள் புதல்வோனே
சகலதேவரு நாடுமயேசுரர் குருநாதா
வரியராவணை மாயவனூர்திரு மருகோனே
மயிலமாமலை மேல்விளையாடிய பெருமாளே. (எ)

தனன தனத்தன்னதனத் - தனதானு.

கவலைமிகப்பெருகுதலிற் றுதிசெயுநட் பழியுமெனுட்
கனவிலுரைத்திடுவனபொய்த் தொழியாதே
களபமுலைச்சிறுமியர்சொற் சுவையைவிழிக்கயலிணையைக்
கருதியளப்பருமயலிற் றவியாதே
தவளநிறப்பொடியுடனக் கணிபவரைக்கறுவுதொழிற்
சமணர்முதற்பகர்சிலருட் களியாதே
தமநியவெற்பனையமயிற் பரிமுதுகிற்றிகழ் தருநற
றருணமதைத்தெரியவருட் புரிவாயே
புவனைகரத் தலமதனிற் சிவவெனவுற்றிகன்மலிமுப்
புரதகனற்கொருபொருள்செப் பியவாயா
பழையுறுகைக்கரிமுகவற் கிளையகுகக்கடவுளெனப்
புகலுமவர்க்கினியவைமிச் கருள்வோனே
சிவசமயத்தினர்தழையக் கவுணியருட்சிறுவனெனத்
திகழுமுழுப்புலமையுடைக் குரவோனே
செறிபொழிலிற்பிடியையடற்களிறுதொழத்தகும்வளமைத்
திருமயிலக்கிரிமுருகப் பெருமாளே. (அ)

தனதான தந்ததந்த - தனதானு.

கொடிபோனு டங்குகின்ற விடையார்ப தம்பணிந்து
கொலையாதி யுந்துணிந்து புரிதீயோர்
கொடைநாடி நெஞ்சநொந்துபலவூர்தொறுந்திரிந்து
குறைதீர்வதின்றிவாட்பி னுழலாதே

பிடிபோன்மு ழங்குசெஞ்சொன் மலிபாடல்கொண்டுவந்து
ணிருநாளி டம்புனைந்து மகிழ்மேலோ
ரிவனேர்தொ ழும்பனென்று கமியேனையுஞ் சொல்வென்றி
யிசைவாக விஞ்சையொன்று தருவாயே
படிவான எந்தகொண்டல் விழியிய வந்தபெண்கள்
பழகார்வ மிஞ்சுதுங்க மணவாளா
பதினறு டம்பனென்று சிலநூல்விளம்பநின்று
பலவாறி லங்கும்விந்தை யுடையானே
மடியாவ ரங்கொடுந்து முதுசூர்வ ணங்கவென்று
மயிலேறும் வென்றிதுன்று முருகோனே
வளையோலி டுந்தடங்கண் மலிசார லங்குறிஞ்சி
மயிலாச லம்புரந்த பெருமாளே. (கூ)

தனனதனதனனதன - தனதான.

சரதமொழி சிறிதுமொழி வரியபிறை யுறுகொடியர்
தமதுமனை களிலடிமை புகலாமோ
சதுமறையி னுவலுமறு வகைநெறியை யிகழுமவர்
சரபமென வுலகின்மிளிர் தரலாமோ
சுரதவிக சிதவினய சரசகுண மகளிரடி
தொழுதுருகும் வினையுமலி வுறலாமோ
துரியநிலை யெனுமவுன ரகசியம துணருமவர்
துணையடியி னுதிர்பொடியு மெளிதாமோ

பாதவிதி வழிகனக சபையினட மிடுமிறைவர்
பணியவொரு பொருள்விரிவை மொழிவோனே
பகவனரி யெனவடிவு கொடுகனக லுடல்பிளவு
படமுனியும் வயவனது மருகோனே
வரதமுறு கையுமபய மெனமிளிர வொருகனவில்
வருகருணை மிகையுடைய குருநாதா
வனசாரு முனிவரருள் கொடுகொடுமை தவிரவளர்
மயிலமலை மிசைநிலவு பெருமாளே. (௧௦)

தனனதானனத்தனதன - தனதானா.

சகுணதேசிகப் பணிபுரி பவரையேசிடத் துணிபவர்
தமதுவாசகப் படிசெல நினையாதே
தமநியாசலத் திணைநிகர் முலைமினார்களைப் பணிபவர்
தருவதானபொய்ப் பொருண்மயல் பெருகாதே
முகுளநாண்மலர்த் துணர்கொடு னடிகண்மீதருச் சனைசெயு
முனிவரோடுநித் தமுமுறு முயர்வாலே
முறைகெடாதமுத் தமிழ்மழை பொழியும்வாழ்வுபெற் றகல்புவி
முழுதுமோதிடத் தகுபுகழ் பெறுவேனோ
குகுகுகூவெனத் தொனிதரு பெரியசேவலுற் றிலகிய
குவடுநேர்புயத் தணிபல படையோனே
குமரிகோமளப் பகவதி கவுரிநாரணற் கிளையவள்
குழவியாயடற் றகுவரை யடும்வீரா

வகுளமாலிகைப் புயமத னுடன்முனுள்வரப் பெறுமிரு
மகளிர்பூண்முலைச் சுவடுறு மணிமார்பா
வளமெலாமுடுற் றுயர்பல குலடுதோய்தாத் திகழ்திரு
மயிலமாமலைக் கழகிய பெருமாளே. (கக)

தனதத்ததானன—தனதானு.

பலபொய்ச்சொல்பேசிய முறைகெட்டவேசியர்
பகவிச்சைமேலிட மெலியாதே
பகைமுற்றுசாரணர் நிகரற்பர்கூறிய
பனுவற்குமேன்மைகள் பகராதே
யுலகைப்பொய்தானெனு நிலைபெற்றஞானிக
ளுறவைக்கனவிலு மறவாதே
யொருபுத்தியாலுனை வழிபட்டபேருட
னெளிரச்செய்தாளவு நினைவாயோ
வலகற்றதானவ ருடல்விட்டுவானுற
வடும்வெற்றிவேலணி புயவீரா
வமையொத்ததோண்மற மகளிச்சையானித
மவள்செப்பும்வேலைகள் புரிவோனே
வலைவைப்பெணுளொடு நடமிட்டவாரண
மகிழக்குலாவிய துணைவோனே
வருபத்தர்நாடிய படிபெற்றுவாழ்வுறு
மயிலத்தின்மேவிய பெருமாளே. (கஉ)

முற்றிற்று.

நூற்பயன் - வெண்பா

வெயிலைத் தருங்கதிர் வேல் வித்தகவேண் மேவு
மயிலைத் திருப்புகழை வாழ்த்திற்—குயிலனையார்
சூழவருங் காமன்முதற் சொல்பகையெல் லாந்தடிந்து
வாழவல்ல போதம் வரும்.

வேலுமயிலுந்துணை.

ப தி க ம்.

காப்பு-வெண்பா.

மயிலா சலக்குமரா வள்ளிமண வாளா
கயிலாயத் தாருதவுங் கந்தா—வயிலாருங்
கையாநீ வந்து கழறியவை யத்தனையும்
பொய்யாக லாமோ புகல்.

அறுசீர்விருத்தங்கள்.

செந்தமிழ்ப்பாமாலையினுக் காசைகொண்டு புனைவது போற் சிறந்த பேற்றைத், தந்தருளவேண்டாமோ விதுவுனக்குத் தெரியாதோ சாற்றுவானேன், வெந்தவெண்ணீறணிவார் தம் மழல்விழியிற்பொறியாகி மேஞள்வந்தாய், கொந்தலருங் கடம் பணிந்த கொற்றவாமயிலமலைக் குமரவேளே. (க)

இனிச்சகிக்கமுடியாத துயர முறக்கண்டுமன மிரங்கிடாமற், பனித்தமொழிப்பேதையருக் குருகவிடன்முறைதானே

பணியென்செய்வேன், ஞெனித்தசிறு சதங்கையுந்தண் டையுங்கழலுங்குலவுமிரு துணைத்தாளானே, குனித்தவரிச் சிலைவேடர் மகள்கணவா மயிலமலைக் குமரவேளே. (உ)

செக்கிலிடுமெள்ளேபோற் பெரிதுவருந்திடுவேன்முற் செகியிற்ருேன்றி, யிக்கினற்கும்விரிஞ்சனுக்கு மியமனுக்குமஞ் சாம விருக்கச்செய்வாய், வக்கிரவெண்கோட்டுமத களிற்றி னுக்குப்பின்ருேன்று மதலாய்வெள்ளைக், கொக்கிறகுபூண்ட பிரான் றவப்பயனே மயிலமலைக் குமரவேளே. (௩)

நெஞ்சறியப்பிழைகோடி புரிந்திருக்குந் தமியேனுண் ணீவந்தந்தா, லஞ்சலளித்தணையதுகண் டிறுமாந்தேனூர் தோறு மலைக்கவேண்டாம், வஞ்சரறிவரியானே வாரணப்புட் கொடியேந்தி வயங்குங்கையாய், குஞ்சரியாள்களிகூருங் கோமானேமயிலமலைக் குமரவேளே. (௪)

நற்றவஞ்செய்வார்வியக்குந் திருவேடமிகக்காட்டி ஞான மில்லாச், சிற்றறிஞர் தாமுமிகழ் தீமைமிகப்புரிவேனைச் சினந்து தள்ளேல், பற்றறுத்தபெரியோருக் கெளியோனே பன்னிருகைப் பவளக்குன்றே, குற்றமெலாம்பொறுத்தருளுங் குணக்கடலேமயிலமலைக் குமரவேளே. (ரு)

பாமருட்சிறற்தொளிருந் தமியேனுஞ்சிறிதேனும் பழு தில்லாதார், தாமடையும்பெரும்பேற்றுக் கிச்சைகொள்ளச் செய்தனையே தருவாய்கொல்லோ, பூமனமழக்குட்டியகைப் புல வோனேயெவ்வுலகும் புகழ்பெம்மானே, கோமளசுந்தரமட வார்க் கினியோனேமயிலமலைக் குமரவேளே. (சு)

தேன்வார்க்குமலர்ப்பொழிற்றண் குறிஞ்சிநிலமெங்குமி கச் சென்றுபாடி, யான்வாழக்குறித்தவித மறிந்திருந்து மிரங் காமைக் கென்னசெய்வே, னூல்வாட்டிநுகர்வேடர்க் கினியா னென்றிறைஞ்சினற்கு முறுகண்டீர்த்தாய், கூன்வாட்கைநவ வீரர் துணைவோனேமயிலமலைக் குமரவேளே. (எ)

பிச்சையமுதருந்தியும்வெண் ணீறுமிகப்புனைந்துநல லோர் பிரியம்பெற்றுங், கச்சைவென்றமுலைமடவார் கடைக் கண்ணுறப்படுந்துயரங் கழியாதேனே, பச்சைநிறத்திருமாலுக் குரிமைமிகுமருகோனே பரமன்வாழுங், சொச்சைநகர்க்கவு ணியனுவந்தோனேமயிலமலைக் குமரவேளே. (அ)

அலைவாரித்துரும்பேபோற் பலவாறுசுழலுமனத் தடிய னேனைப், புலைவாழ்க்கையுடையார்க்கு மஞ்சிநிற்கச்செய்த னையே புகழ்ச்சீர்ந்தாள், கலைவாணிக்கிலக்கணநூல் விரித் துரைக்கும்புலவோனே கருணைக்குன்றே, கொலைவாட்கைச் சூர்தடிந்த கொற்றவனேமயிலமலைக் குமரவேளே. (கூ)

பூவினுக்குளுறைவானும் புணரியினிற்றுயில்வானும் புரஞ் சுட்டானு, நாவிடத்திற்கொள்ளுமுன்றன் றிருப்புகழைப்பகர் வேனு நவியலாமோ, காவிலங்கும்பொன்னகரி காப்போனே யெவ்வுலகுங் கவினுமாறு, கூவியசீர்ப்பெருஞ்சேவற் கொடி யானேமயிலமலைக் குமரவேளே. (க௦)

பாடரியபலமறையா கமங்களுக்குங்குருவான பான்மை யுற்றும், வேடமகள்பாலிரந்தா யென்றிகழ்வார்க்சொல்லுமென் றன் விருப்பமீந்தா, ளாடகமேயனையபொறிச் சிறைவண்டு

மலிசோலை யடுக்கமெங்குங், கோடரமாடிடக்குயிலின் னிசை காட்டுமயிலமலைக் குமரவேளே. (கக)

செஞ்சுவைத்தீந்தமிழ்ப்பொழியைக் கிரிக்கடுத்தநெல் வேலிச் சிறுவனன்பாற், கொஞ்சுகவிமாலைகொண்டு மகிழ் வானைமயிலமலைக் குமரவேளை, நெஞ்சுருகிவழிபாடு புரிந்து திருநீறணிந்து நேடுவார்முன், னஞ்சுறழுங்கரியநிறச் சமனணு கானென்பதுமெய் நவின்றுய்வீரே. (கஉ)

முற்றிற்று

பதிகம்.

காப்பு - வெண்பா.

கயிலைக் கிரியானுங் கைகுவிக்குங் கந்தன்
மயிலத் தினைக்கருதி வாழ்த்த—வெயிலவனைக்
கொண்டுசெய்த வேற்படையுங் கொற்றநவ வீரர்களுங்
கண்டுநின்று காக்கக் கடன்.

கலிவிருத்தங்கள்.

அடியார்புடையூ டணுகக்கருதும்
படிவாழ்வுபடைத்திடு நாளுளதோ
பொடியாடியபுங் கவனருந்தவும்
வடிவேன்முருகா மயிலத்தரசே. (க)

தளர்வுற்றவர்தம் மைநினைத்தயர்வே
னிளமைக்கழிவெய் துமுன்வந்தருள்வாய்

கிளர்பூத்தமிழ்பா டியகிள்ளையினுள்
வளர்சிற்பரனே மயிலத்தரசே. (௨)

கரையின்றியகா மநெடுங்கடலின்
றிரையென்றுறுதீ வினையென்றொழிவே
னரைவிஞ்சியநற் சரடம்பொருபுள்
வரையுங்கொடிசேர் மயிலத்தரசே. (௩)

ஏழைக்கிதமோ துமிடக்கிராற்
கோழைப்படுகின் றகுணங்கெடுமோ
மாழைக்குயர்வன் னநறுங்கனிசேர்
வாழைப்பொழில்சூழ் மயிலத்தரசே. (௪)

சொல்லிற்சுவையின் றியதுர்ச்சனர்பான்
மல்லிட்டுவருந் தலொழித்தருள்வாய்
கல்லிற்றிரிகின் றவர்கன்னிகையாம்
வல்லிக்கெளியாய் மயிலத்தரசே. (௫)

பாகைப்பொருபைந் தமிழ்பாடிடுவா
ரோகைக்கடலூ டுறவந்தருள்வாய்
தோகைக்குடையோ டுசுமர்தளிகூர்
வாகைப்பரியாய் மயிலத்தரசே. (௬)

நின்னுவனிரம் பியநெஞ்சொடுவா
ழென்னுகமிளைப் பதறிந்திலையோ
பொன்னுடர்தருங் கொடிபூண்முலைசேர்
மன்றுமுதல்வா மயிலத்தரசே. (௭)

வியன்மிக்குளவே ணுபுரத்திடைவந்
தியல்செப்பியதியா வனெனத்தெளியேன்
மயல்வெற்பொடுவா ரணமும்பொடியாம்
வயமுற்றவனே மயிலத்தரசே. (அ)

புலைமாவறவென் றுயர்புண்ணியனே
நிலையானவனென் றுநிகழ்த்திலனே
வலைவாரிதிசுற் றிடுமம்புவியின்
மலைதோறுறைவாய் மயிலத்தரசே. (௯)

மூவர்க்குயிரா முருகாவெனவே
கூவத்தகுகொள் கையளித்திலையோ
சேவற்கொடியுஞ் சிகிவாகனமும்
வாவத்திகழ்தென் மயிலத்தரசே. (க0)

குருவாமெனநம் பியகொள்கையினோர்
கருவாழிகடக் கவிடுத்திலையோ
பொருவாதகடம் புபுனைந்தவனே
வருவார்களிகூர் மயிலத்தரசே. (கக)

மஞ்சார்பொழில்சூழ் மயிலத்தரசிற்
கஞ்சானனனு ரமர்நெல்லையினு
னெஞ்சாரநிகழ்த் தியபாநுவல்வார்
பஞ்சாயுதனன் னபதத்தினரே. (கஉ)

முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

சிவஞானபாலையசுவாமிபதிகம்

காப்பு-வெண்பா

தவஞானத் தோர்பரவுந் தண்மயில வெற்பிற்
சிவஞானிக் கோர்பதிகஞ் செப்பிப்—பவவேலைக்
கப்புறத்து மெய்வாழ் வடைய வரனீன்ற
துப்புறழ்மால் வேழந் துணை.

வெண்டளைக்கலிப்பாக்கள்.

எவ்வேளை யுநதன் னிதயத் தெழில்வேற்கைச்
செவ்வேளை வைக்குஞ் சிவஞானி சேருமிடம்
வெவ்வேளுக் கஞ்சி வியன்சார லெங்குநித்த
மைவேழ மாட வயங்குமயி லாசலமே. (க)

பொம்ம புரமும் புவியும் புரந்தருளுஞ்
செம்மற் சிவஞானி சீருணரச் செய்யுமிடங்
கைம்மலராற் செவ்வேற் கடவுளையே பூசிப்பார்
மம்ம ரறுப்பான் வளர்ந்தமயி லாசலமே. (உ)

ஆன்ற புலவோ ரளவில்லா ராய்ந்துரைக்குந்
தேன்றதும்பு பாடற் சிவஞானச் சித்தரிடங்
கான்ற மதுமலர்ப்பூங் காவுலகங் காக்கும்வைவேற்
றோன்ற லருட்சீர் துலங்குமயி லாசலமே. (ங)

நீடுபுகழ்ச் செவ்வே ணிகழ்த்துமொழி கொண்டொருவன்
பாடுஞ்சிவஞான பாலையன் பத்தரிட
மீடுரைக்க வொண்ணு வெழிலார் மயில்கோடி
யாடும் பெருமை யவிர்ந்தமயி லாசலமே. (ச)

பூரணமாமுன்மைப்பொருளுணர்ந்தபுண்ணியத்தாற்
சீரணமற் றாய்ந்த சிவஞானி சீர்த்தவிடங்
காரணமு மெண்ணில்பல காரியமு மானதென்னு
மாரணத்தோ ணைப்புடைத்தோ ருடமயி லாசலமே. (ரு)

வெம்பு குணத்து மிலேச்சருக்கு மெய்விளக்குஞ்
சிம்பு ளனைய சிவஞானச் செல்வரிடம்
பம்பு கடலைப் பரிந்தாடை யாவுடுத்த
வம்புவிக்கோ ராதரமே யானமயி லாசலமே. (சு)

கல்லு மணலுங் கருப்பிரதங் காட்டும்வண்ணஞ்
சொல்லுஞ் சிவஞானி சோராமல் வாழுமிட
மல்லும் பகலுமற்ற வானந்த வீட்டுள்வைத்துப்
புல்லுங் குகன்சீர் பொலிந்தமயி லாசலமே. (எ)

வென்றி விசையன் விரும்புந் தவத்தினுக்காப்
பன்றியின்பின் னேகிவரும் பாலையன் பற்றுமிட
மின்[illegible]ம் வைவேல் விகிர்தன் விரும்பநிற்குங்
குன்றினத்துண் மேலாக் குலவுமயி லாசலமே. (அ)

எண்ணில்பல சீருமெடுத் தேத்துவா ரெல்லவர்க்கு
நண்ணியபே ரீந்தசிவ ஞானியென்று நத்துமிடம்
விண்ணினர்க்கோ ராதரமாம் வேற்பெருமான் வேழமுகப்
புண்ணியனோ டாடும பொருவின்மயி லாசலமே. (கூ)

மெய்வழக்கர் நால்வரென வென்றிமி குஞ்சித்தியற்றித்
தெய்வநலங் கண்ட சிவஞானத் தேவனிடம்
பொய்வலிமைத் தானவராம் பொல்லார்க் கெமன்போலுங்
கைவடிவேற் கந்தன் கவின்றமயி லாசலமே. (கo)

வல்லவர்கள் போற்று மயிலா சலத்தினையு
நல்லபுகழ் பெற்றசிவ ஞானியையு நாடியின்று
செல்லனைய வோசைத் திருப்புகழோன் செப்புமிவை
சொல்லறிஞர் தம்மைத் துகள்சிறிதுந் தோயாதே. (கக)

முற்றிற்று

சிவப்பிரகாசமூர்த்திபதிகம்.

காப்பு-வெண்பா.

தெய்வப் புலமைச் சிவப்பிரகா சக்குருவைச்
சைவத் தலைமைத் தமிழ்க்கடலை—யுய்வதெண்ணிப்
போற்றுதற்குக் காப்பு புகர்முகத்திற் பூண்கொள்பிறைக்
கீற்றுறழோர் கோட்டுக் கிரி.

கலிவிருத்தங்கள்.

குரவனுல் வெல்லருங் கொடியற் செந்திலைப்
பரவலால் வெல்லுநின் மாண்மை யென்சொல்வே
னரவணி வானெஞ் சகத்தி லாக்கலாற்
கரவறுஞ் சிவப்பிர காச மூர்த்தியே. (க)

அந்தநாண் மடிபிடித் தவன்ற னுருயிர்
சிந்தவோ தியபுகழ் சிறிதென் றெண்ணிடேன்
செந்தமிழ் பாலையன் சேரச் சிந்தையுட்
கந்தனே: சிவப்பிர காச மூர்த்தியே. (உ)

புலைமலி மாரிதேர் பொடித்த வண்ணமந்
நிலையினர் பலரையு நீற்ற நண்ணுவி
ரலைநுகர் மலைமுனி யளித்த முத்தமிழ்க்
கலையுணர் சிவப்பிர காச மூர்த்தியே. (௩)

சொற்பனத் தென்னுணீர் சொன்ன வாசக
மற்பரு மொப்பமெய் யருடந் தாட்கொள்வீர்
விற்பனப் புலவரும் வெருண்டு நாணுறுங்
கற்பனைச் சிவப்பிர காச மூர்த்தியே. (௪)

புவித்தியக் கறுகலம் புரிதல் வேட்டுளேன்
றவித்திடா துதவுநுஞ் சாதம் பொய்க்குமோ
புவித்திடு மனமிலாக் கோள ரோர்வருங்
கவித்திறற் சிவப்பிர காச மூர்த்தியே. (௫)

தழுவிகர் தவத்தரிற் றமிய னன்பினுக்
கழுகியவ் வீரலா தாருள் ளார்கொலோ
பழமறை யாகமப் பயனெ லாமிகக்
கழறிய சிவப்பிர காச மூர்த்தியே. (சு)

கேட்டிய லெனக்கருட் கிளர்ச்சி தோயவிந்
நாட்டிய லுமதிசை நவிலற் பாலதோ
வேட்டிலல் லமன்புக ழெழுகி மெய்ந்நிலை
காட்டிய சிவப்பிர காச மூர்த்தியே. (எ)

விசையனுக் கருள்புரி வேட னாரு
ணசைகொடு துதித்துநா னவிய லாகுமோ
விசைவில்புன் கவிஞர்நெஞ் சிரணங் காண்டரு
கசைநிகர் சிவப்பிர காச மூர்த்தியே. (அ)

இருமக வீன்றநும் மீச ரென்றுதிக்
கருள்செயுந் தினத்தையா னறியச் சொல்லுவீர்
பெருமைசால் பத்தியில் பிசிதர் பேணிடுங்
கருமமில் சிவப்பிர காச மூர்த்தியே. (சு)

வாதவூர் முனிமுதல் வகுக்கு நால்வர்மெய்ப்
போதம்வேட் டுறவெனைப் புரிந்த தார்கொலோ
மாதர்நல் லார்புவி மாடை நாடுமுக்
காதலில் சிவப்பிர காச மூர்த்தியே. (க0)

உலப்பில்சீர் திகழ்நல்லாற் றாரி லொன்றிடை
கலப்புறுஞ் சிவப்பிர காச மூர்த்தியைப்
புலப்பகைர் திருப்புகழ்ப் புலவன் போற்றிவை
சொலப்பெறு மவரெலாந்துயரெய் தார்களே. (கக)

முற்றிற்று

தெய்வமே துணை.

தனிவெண்பாக்கள்.

குருவுங் கணபதியுங் கொற்றமழு வானுந்
திருமடந்தை காவலனுஞ் சேணில்—வருசுடருந்
தேவினத்தின் றுயான சிற்சத் தியுமுருகோன்
மூவிரண்டாக் காட்டு முகம்.

சத்தி வடிவேற்கைச் சண்முகனைச் சந்ததமு
நத்தியெழுத் தாறு நவின்றிட்டேன்—சித்தியுட
னுக்கம் பெருக்கி யருள்விளைக்கு மெஞ்ஞானத்
தூக்கம் வருகின்றது.

மேகங்கா ளுங்களுக்கு வேலா யுதனுணை
மாகம் புரந்திருக்கு மன்னுணை....யேகபர
வத்துவம தாணையிந்த மாநிலத்தின் மேற்கருணை
வைத்துவிடப் பெய்ம்மின் மழை.

வந்த[illegible]கத்தை மழைபொழியச் சொல்லாம
லெந்தவூ ர்ப்பொழிதற் கேவுகின்றாய்—சந்தனப்பூஞ்
சோலைப் பொதியைநிகர் தொல்மயில வெற்பிலொரு
வேலைப் பிடித்ததெய்வ மே.

என்னிமித்த மோவடிவே லேந்துமயி லாசலத்தோன்
றன்னிமித்த மோமுகில்காள் சாற்றுவீர்—மின்னியி[illegible]
திங்குவந்து பெய்யாம லேகுகின்றீ ரெண்ணிலுயிர்
மங்குமுன்னம் பெய்ம்மின் மழை.

நிரையதனை நீக்கித் தெரிசனந்தந் தாண்டோ
ருரைபகர வொண்ணாதோ வோதாய்—பரையுதவு
மைந்தனே யீடின் மயிலா சலத்துறையுங்
கந்தனே யெங்கண்முரு கா.

இன்னநந் துயர்ப்படுதற் கென்னுன் முடியாது
நின்னன்ப ருண்மை நெறிதந்தாண்—முன்னங்
கிரிதுளைத்த வேற்கைக் கிழவா குமார
வரிதுனக்கொன் றில்லையல்ல வா.

கந்தா கடம்பா கதிர்வேலா கன்னிபெற்ற
மைந்தா குறத்தி மணவாளா—விந்தாருஞ்
செஞ்சடையான் போற்றுகுரு தேசிகனே யென்[illegible]ன்
பஞ்சடையா மற்றிருக்கண் பார்.

குருபாதமேகதி.